# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஸு ஜூன்மீ 5உ [ந. 149


பிரஸங்கம் CXLIX.

## மிஸ்ட்டர் ஈடன் இதாலியைப்பற்றியும், விமானப் போரைப் பற்றியும் பேசிய பேச்சு.

நேசதேசங்கள், பாஸிஸ்ட், ஜெர்மன் படைகளைக் கண்டவிடத்தில் எல்லாம் தாக்குவார். இப்போது இதாலி விமானத் தாக்குதலுக்கு நல்ல இலக்காக இருக்கிறது.

நமது சக்தி பூராவையும் நாம் இதற்காக உபயோகிப்போம்; ஏனெனில் நாம் பாஸிஸ்ட் முறையை நசுக்கத்தீர்மானித்திருக்கிறோம். தவிரவும் ஹிட்லருக்காக இதாலி யுத்தத்தை நடத்தும் வரையில் நாம் இதாலிமீது கடுமையாகப் போர்நடத்தவும் முடிவு செய்திருக்கிறோம்.

இப்பொழுது இதாலியருக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கும் இனி ஏற்படப்போகிறவைகளுக்கும் முஸோலினியும் அவரது பாஸிஸ்ட் சகாக்களுமே மூலபுருஷர்கள்.

அவர்கள் திடீரென்று துரோக புத்தியுடன் பிரான்ஸைத் தாக்கியதே நாம் இப்போது இதாலியைத் தாக்குவதற்குக் காரணமாகும். லண்டன் மீது நடந்த குண்டு வீச்சில் தமக்கும் ஒரு பங்கு கொடுக்கும்படி வேண்டிக்கொண்டவர் முஸோலினிதான். அதையும் நாம் மறக்கவில்லை.

தங்களுடைய சகாவான ஜெர்மானியரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொடிய யுத்தத்தில் இதாலியைக் கவரும் அவரது தீய ஆலோசனைகளும்தான் அனுவசியமாக வலித்திழுத்திருக்கின்றன.

இந்தத் தாக்குதலை கடைசிவரை எதிர்த்து நிற்பதா அல்லது இதை நிவர்த்திக்க வழி தேடுவதா என்று முடிவு செய்யும் பொறுப்பு இதாலியரிடமே இருக்கிறது.

பிரிடனில் வர்த்தகக் கப்பல்கள் அதிகம் கட்டப்பட்டு வருகின்றன. அவைகளின் நஷ்டமும் குறைந்துகொண்டே வருகின்றன. எதிரியின் U படகுகள் மேலும் மேலும் அதிகமாய் நாசமாக்கப்படுகின்றன. இவைகள்யாவும் இந்த யுத்தத்தில் மிகவும் முக்கியமான அம்சங்களாகும். அவைகள் தொடர்ந்தே நடந்தும் வருகின்றன. அதைவிட அதிகமாக நான் ஒன்றும் சொல்ல முடியாது. ஸப்மரீன் வேட்டைகள் அதிகமாகின்றன. நமக்குத் திருப்திகரமான நிலை தலைகாட்டியிருக்கிறது.

### காலந்தவறி வற்புறுத்தப்படுகிறது.

விமான மூலம் குண்டுமாறி பொழிவதை நிறுத்தவேண்டும் என்று எவர் யோசனை சொன்னாலும் அதற்கு நாங்கள் செவிசாய்க்கப்போவதில்லை. காலம் கடந்து எங்களை வற்புறுத்துவது எங்களைப் பாதிக்கப்போவதில்லை.

இப்போது வெடிகுண்டு வீச்சை ஆக்ஷேபிப்பவர்கள் பிரிடன் தாக்கப்பட்டு நாசமாக்கப் பட்டபோது வாய்பேசாமல் இருந்தனர். இப்போது ஜெர்மனிக்கும், இதாலிக்கும் நாச காலம் கிட்டிவிட்டது.

இந்த நடவடிக்கையை நாம் ஆரம்பிக்கவில்லை. வார்ஸா, ராட்டர்டாம் ஆகிய நகரங்கள் நாசமாக்கப்பட்டதுபற்றி சந்தோஷப்பட்டவர் கோயரிங்தான். நாஸிகளுக்கு இதனுல் மகத் தான சந்தோஷம் ஏற்பட்டது. இந்தக் காட்சியை படம் பிடித்தும் காட்டினர். தங்களது குதியில் இருந்த இதர நாடுகளைப் பயமுறுத்தவும் அவர்கள் முயற்சித்தனர். இப்போது அதெல்லாம் சாத்தியமில்லை.

எதிர்த்தவர்கள் எதிர்த்து அடிக்கப்பட்டனர். இந்த நாஸி பாஸிஸ்ட் ஆட்சி முறைகள் சிதறும்வரை நமது நடவடிக்கை நீடிக்கும். இதைப்பற்றி எவருக்கும் சந்தேகம்வேண்டாம்.

---

## கொமிண்டர்னைக் கலைத்தேன் ஸ்டாலின் கூறும் காரணங்கள்.

ஸர்வதேசப் பொதுவுடமைக் கக்ஷியைக் கலைத்து விட்டது சரியே. இதுவே அதற்குத் தகுந்த சந்தர்ப்பம். விரைவில் ஸ்வதந்திர லக்ஷியமுள்ள மக்கள் ஒன்றுபட்டு ஸ்வதந்தி ரத்தை நசுக்க விரும்பும் எதிரிகளைத் தாக்க இது உதவும். கலைத்ததற்குக் காரணங்கள் :—

(A) மாஸ்கோ பிற நாட்டு விஷயங்களில் தலையிட்டு அவற்றைப்போல் ஷிவிக் மயமாக்க விரும்புகிறது என்று ஹிட்லர் கோஷ்டியார் புரிந்து வரும் தீயப் பிரசாரத்தைத் தடுக்க இதுவே சரியான வழி.

(B) தொழில் கக்ஷியில் பொதுவுடமைக் கொள்கைக்கு விரோதமாக இருப்பவர்கள் பல நாடுகளிலும் பொதுவுடமை வாதிகள் தங்களது நாட்டிற்கு அனுகூலமான விதத்தில் இல்லாமல் வெளியார் உத்தரவுப் பிரகாரம் நடந்து வருகின்றனர் என்று கூறி வருவதையும் இந்த நடவடிக்கை இனி தடுத்து விடும்.

### தேச விசுவாசிகளுக்கு ஒத்தாசை.

(C) ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேச பக்தர்கள், ராஜீய, மத வேறுபாடுகளைவிட்டு ஒன்றுபட்டு தாய்நாட்டின் விடுதலைக்கும் பாஸிஸத்தை ஒழிப்பதற்கும் உழைக்கும்படிக்கும் இது வழி காட்டும்.

(D) இது தவிர பல நாட்டுத் தேச பக்தர்களும், உலகத்தில் ஹிட்லர் ஆதிக்கம் பெருமல் தடுப்பதற்கும் உலக ஸ்வதந்திரத்துக்காக ஒற்றுமையாக இனி நடப்பதற்கும் இயலும். இதனுல் வருங்காலத்தில் சமத்துவம் கொண்ட நாடுகளின் சேர்க்கை தலை காட்டும்.

எல்லாவற்றையும் யோசித்தால் ஹிட்லரின் கொடுங்கோலை முறியடிக்கும் யுத்தத்தில் நேசதேசத்தார்களின் ஒற்றுமை அதிக வலுவடையுமென்று தோன்றுகிறது.

பாஸிஸ்ட் பூதம் மிகவும் மும்முரமாகக் கிளம்பியிருக்கும் இந்தச் சமயத்தில் கொமிண்டர்னைக் கலைத்தது சரியே என எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சமயத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு இந்த பூதத்தைக்கொன்று மக்களை விடுவிக்கவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 29—5—43-லிருந்து 4—6—43-வரை.

**ஜெர்மனியும், இதாலியும்.**—ஜெர்மனியின் பேரிலும் இதாலியின் பேரிலும், விமானத் தாக்கு தல் அதிகரித்துவிட்டது. பகலிலும், இரவிலும் ஒவ்வொருநாளும் அச்சுநாட்டு லக்ஷியங்கள் தாக்கப்பட்டு நொருக்கப்படுகின்றன. மேமீ. 21-ம் தேதியன்று விமான இலாகா பார்லி மெண்டரி உதவி காரியதரிசியான காப்டன் ஹாரால்ட் பால்பூர் பின்வருமாறு எழுதுகிருர்.

நமது அட்டவணையில் டார்ட்மெண்டு, யேஸ்பர்க் போன்ற நகரங்களைச் சேர்த்துவிட்டோம். இன்னும் அநேக நகரங்களும் பதிவாக வேண்டியிருக்கிறது. இந்த அபிப்பிராயம் ஊர்ஜித மடைந்து விட்டது. மேமீ 23-ம் தேதி டார்ட்மெண்டும், 25-ம் தேதி டஸ்ஸல்டார்வும், 27-ம் தேதி ஜேனு, எஸ்ஸனும், 29-ம் தேதி இதாலியிலுள்ள லெக்ஹார்னும், பாக்கியாவும், லோராவும் தாக்குண்டன. நான்கு இஞ்ஜின்களுள்ள விமானங்கள் 4,000 பவுண்டு, 8,000 பவுண்டு எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் பொழிந்து மகத்தான நஷ்டம் விளைவித்தன. டார்ட் மெண்டு ஜெர்மனியின் கனமான ஆயுதங்கள் செய்யும் தொழிற்சாலை. எஸ்ஸனில் கிரப்ஸ் ஒர்க்ஸ் இருக்கின்றது. ஜேனுவில் கண்ணாடி சாமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. லெக்ஹார்ன் என்பது இதாலியின் கரி ஸப்ளை செய்யும் மத்யஸ்தலம்.

**ருஷ்யா.**—மேமீ 26-ம் தேதி ரோம் ரேடியோவில் வரப்போகும் யுத்தத்துக்காக லெனின்கிராடிலிருந்து கருங்கடல்வரையில் 8,00,000 ஜனங்கள் கொண்ட 200 டிவிஷன் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று ஒலிபரப்பப்பட்டது. யுத்தமுனை பூராவும் ரோந்துவேலையும் கேந்திர ஸ்தானங்களில் சிறிய சண்டைகளும் நடைபெறுகின்றன.

**அலூஷியன் தீவுகள்.**—சமீபத்தில் வந்த தகவலின்படி அட்டுத்தீவிலுள்ள பிஷ்ருக் என்னும் முனையை அமெரிக்கத் துருப்புகள் பிடித்துவிட்டன. இந்த முனையானது அட்டுக்கிராமத்துக்குத் தெற்கேயிருக்கிறது.

**சைனு.**—சைனுவில் அரிசிக் களஞ்சியம் என்று சொல்லக்கூடிய ஹூபே மாகாணத்திலுள்ள செழிப்பான பிரதேசத்துக்காக பலமான சண்டை நடைபெறுகிறது. இச்சாங்குக்குத் தெற்கே யாங்ட்ஸீ நதியின் தென்கரையோரமாக ஜப்பானியர்கள் முன்னேறி யூயாங்வானையும் செங்கியாங்கையும் பிடித்துவிட்டார்கள். டெங்டங்கி ஏரிக்குச் சமீபத்திலுள்ள சங்க்டா நகரத்தைப் பிடிப்பதுதான் ஜப்பானின் லக்ஷியம். இது ஜப்பான் வசமானுல் சாங்க்ஷா விலிருந்து சுங்கிங்குக்குப்போகும் மார்க்கம் துண்டிக்கப்படும். தான்யக் களஞ்சியமும் அவர்கள் வசமாகிவிடும்.

**அரக்கான்.**—அரக்கானில் நிலைமையில் மாறுதலில்லை.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**24—5—43.** (திங்கட்கிழமை.)

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

**எதிரி, துறைமுகங்களும் விமான நிலயங்களும்.**—ஸார்டீனியா (Sardinia).

**துறைமுக ஸ்தாபனங்களிலுள்ள கப்பல்கள், களஞ்சியங்கள், கிட்டங்கிகள்**—லாமடலினு (La Maddalena), டெர்ரனோவா (Terranova).

**ஸப்ளைக் கப்பல்கள்**—ஸார்டீனியாவிலுள்ள கார்லோ போர்ட் (Carlo Forte) துறைமுகம்.

**ராணுவங்கள் தங்கியிருக்கும் இடங்கள்**—ஸார்டீனியாவிலுள்ள இக்லீஸியாஸ் (Iglesias).

**விமான நிலயங்கள்.**—பான்டெலேரியா (Pantellaria).

**டேங்கர் (Tanker)** ரெஜியோ டி காலபிரியா (Reggio Di Calabria).

**ரயில்வே தளங்கள்.**—ஸான் கியோவன்னி (San Giovanni).

**ருஷ்யா (Russia).**

**விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East.)**

**ஜப்பானியச் சைனியங்கள்.**—அட்டு (Attu), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

**ஜப்பானியச் சைனியங்கள்.**—ஷார்ட்லண்ட் தீவு (Shortland) பிரதேசம், ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda).

**ஜப்பானிய ஸ்தாபனங்கள்.**—பர்மாவிலுள்ள முனிவா (Monywa).

**ரயில்வே தளங்கள்.**—பர்மாவிலுள்ள தாழி (Thazi).

**எதிரித் துருப்புகள் தங்குமிடங்கள்:**—பர்மாவிலுள்ள கமாய்ங் (Kamaing) வாஷாங் (Washawng).

ஜப்பானியத் துருப்புகள்.—பர்மாவிலுள்ள உடாங் (Udaung), கோமலின் (Khomalin).

**25—5—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எதிரி விமான நிலயங்கள்—அபிவில்லி (Abbeville).

விமானத்தாக்குதல்கள்.—வடக்கு பிரான்ஸ் (North France), (4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலைப் பிரதேசம்—ஜெர்மனி டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பற்கட்டும் துறைகள், கப்பல் படை தளம்.—மெஸ்ஸினு (Messina).

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள லிகாதா (Licata), எம்பெடோஸில் (Empedocle), போர்ட்டோ ஸ்கூஸோ (Porto Scuso).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள டெர்ரியநோவா (Terranova), போப்போ டிபால்கோ (Bobba Difalco).

விமான நிலயம், கப்பற் கட்டும் துறைகள்.—பான்டெல்லேரியா (Pantellaria).

கடல் விமான தளம்—கிரீஸிலுள்ள பிரெவேஷா (Preveza).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய பாலங்கள்.—நியூ பிரிடனிலுள்ள கேவுயூ (Gavuyu).

சாமானிறங்குமிடங்கள், கடற்துறை பிரதேசங்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள மடாங் (Madang), பின்ஸ்சாபென் (Finschhafen).

ஜப்பானிய இலக்குகள்.—பர்மாவிலுள்ள மேல் சிண்ட்வின் (Upper Chindwin).

போக்குவரத்துகள்.—பர்மாவிலுள்ள பூதி (டாங்கிற்கு அருகில் Buthidaung).

**26—5—43.** (புதன்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரிக் கடற்கரை ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso).

இதர விமான நிலயங்கள்.—ஸிஸிலி, (Sicily), பொண்டு ஒலிவோ (Pondu Olivo).

கப்பல்கள்.—போர்ட்டோ போண்டிரோமனு (Porto Ponte Romano).

ஸப்ளை கப்பல்.—ஸார்டீனியாவிலுள்ள கோல்பேர் அரான்கி (Golfo Aranci).

ராணுவ நிலயங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள வில்லா சிட்ரோ (Villacidro).

மின்சார நிலயங்கள்.—பான்டெல்லேரியாவிலுள்ள டிரிஸோ (Triso).

கப்பல்கள்.—கிரீஸிலுள்ள மாலேமுனை (Cape Malea).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

பீரங்கி ஸ்தாபனங்கள், தங்கியிருக்குமிடங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

சிகாகோ பிரதேசம் (Chicago Area).—அட்டு (Attu).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) தீவு.

**27—5—43.** (வியாழக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமானத் தாக்குதல்கள்—வடக்கு பிரான்ஸ் (North France); பெல்ஜியம் (Belgium). (3 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

இரவு.—கிரப்ஸ் (Krupp's) யுத்த தளவாடங்கள் செய்யுமிடங்கள—ஜெர்மனியிலுள்ள எஸ்ஸென் (Essen).

சுரங்க வேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயங்கள்.—டெஸிமோ மன்னு (Decimomannu). பான்டெல்லேரியா (Pantellaria).

அச்சுநாட்டுக் கப்பல்கள்.—கிரீஸ் (Greece); ஏஜியான்கடல் (Aegean Sea).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—நியூ கினியாவிலுள்ள மடாங் (Madang).

விமான நிலயம் ஸப்ளை ஸ்தாபனங்கள்.—நியூ கினியாவிலுள்ள லே (Lae).

ஜப்பானியச் சைனியங்கள்.—அட்டுத்தீவு (Attu), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பான் கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் தீவு (Akyab).
எதிரிச் சைனியங்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங்கிற்குத் தெற்கிலே.

**28—5—43.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—நிலக்கரி அரங்கங்கள்—பெல்ஜியத்திலுள்ள ஷீப்ரக் (Zeebrugge). (2 நேச தேச விமானங்கள் காணப்படவில்லை).
இரவு.—எதிர் R. படகுகள்—பிரான்ஸிலுள்ள செர்பர்க் (Cherbourg) தீபகற்பம் (6 R. படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 3 R. படகுகள் நாசமாக்கப்பட்டன).

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—இதாலியிலுள்ள பாக்கியா (Foggia).
கடற்துறைகள், எண்ணெய்க்கிடங்குகள்.—இதாலியிலுள்ள லெக்ஹான் (Leghorn).
விமான நிலயம்.—ஸிஸிலி (Sicily), பான்டெல்லேரியா (Pantellaria).
சிறிய கப்பல்கள்.—கிரீஸ் (Greece).

**ருஷ்யா (Russia).**

ரயில்வே ஜங்ஷன்.-வெட்பெஸ்க் (Vitebsk).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளம்.—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak), ஹேஹோ.
விமான நிலயம்.—பர்மா.
மோட்டார் வண்டிகள், துடிசைகள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).
ஜப்பான் துருப்புகள்.—கால்மோ பிரதேசம் (Kalymyo).
விமான மிறங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

**29—5—43.** (சனிக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—U. படகு தளங்கள்—பிரான்ஸிலுள்ள, லாபெல்லிஸ் (La Pallice), செயிண்ட் நாஸேர் (St. Nazaire), ரென்னிஸ் (Rennes).
விமான நிலயங்கள்.—கேயன் (Caen), மாபெஷியஸ் (Maupertus). (13 நேச தேச விமானங்கள் காணப்படவில்லை).
இரவு.—(33 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை, 2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
தொழிற்சாலை ஸ்தலங்கள்.—ஜெர்மனியிலுள்ள வப்பர்தால் (Wupperthal),

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பற் கட்டும் துறைகள், கப்பல்கள், விமான நிலயங்கள், யுத்த தளவாட துவியல்கள், ரயில்வே ஸ்தாபனங்கள்.—ஸிஸிலி (Sicily), ஸார்டீனியா (Sardinia), பான்டல்லேரியா (Pantellaria).

**ருஷ்யா (Russia).**

(22—5—43 முதல் 29—5—43 முடிய இந்த வாரத்திய ருஷ்ய விமான நஷ்டம் 118. எதிரி விமான நஷ்டம் 456).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்கள்.—கோமெல் (Gomel), காராகேவ் (Karachev).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் துணைக்காவலோடு கூடிய கப்பல்கள்.—ஹன்ஸாகுடா (Hansa Bay).
வியாபாரக் கப்பல்கள்.—பெண்டா கடல் (Banda sea).
ஜப்பானிய தளங்கள்.—ராம்பெங் (Rambang), டச்சு சுண்டா (Dutch Sunda) டச்சு நியூ கினியா (New Guinea).
எதிரி ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள ஹுகாங் சமவெளி (Hukaung).
துடிசைகள்.—பர்மாவிலுள்ள சம்ப்ராபம் (Sumpra Bum).
கட்டடங்கள்.—கமாய்ங் (Kamaing).
எதிரிச் சைனியங்கள்.-நானிசென் (Nanysen), சிங்பான் பிரதேசம் (Singbhan).
நீராவி இஞ்ஜின்கள்'—பர்மாவிலுள்ள தாழி (Thazi).
விமான நிலயம்.-பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila).

**30—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—இரும்புத் தொழிற்சாலை—மாண்ட்வில்லி (Mondeville).
வேவு பார்த்தல்.—பெல்ஜியம்.
இரவு.—சுரங்க வேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—இதாலியிலுள்ள போகியா (Foggia).
விமானத் தொழிற்சாலை, விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
துறைமுகங்கள், ரயில்வே போக்குவரத்துக்கள், விமான நிலயங்கள், இதர ராணுவ இலக்குகள்.—பான்டெல்லேரியா (Pantellaria), ஸார்டீனியா (Sardinia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

சாமான்கள் ஏற்றிறக்குமதி செய்யும் பிரதேசங்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஜப்பானியப் படகுகள்.—டாலா கடல் (Tala sea).

நீர் நிலைகள், கப்பல்கள்.—செலபஸிலுள்ள கெண்டாரி (Kendari), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

கேலிமியோ (Kalemyo) வும் இதர எதிரி சைனியங்களும்.—பர்மாவிலுள்ள கேலிமியோ பிரதேசம். ஜப்பானியத் துருப்பு சைனியங்கள், பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung) பிரதேசம்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**25—5—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு நகரம் இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்—குபான் (Kuban) பிரதேசம்.

**26—5—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—அட்டுதீவு (Attu) தீவு.

**27—5—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமானப் படையெடுப்பு ஒரு இடத்திலும் இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்—முன்னேறித் தாக்கும் பிரதேசங்களுக்குப் பின்னால்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகங்கள்.—மொரோப் (Morobe), மாம்பார் (Mambar), டக்ளஸ் (Duglas) (எல்லாம் நியூ கினியாவிலுள்ளவை).

**28—5—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்துகள்.—அரணுக்குப் பின்னால்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள மில்லிங்கிம்பி (Millingimbi). (3 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**29—5—43** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம் (விமான எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—குபான் (Kuban).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**30—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—குபான் (Kuban) பாலமுகப்பில்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—இந்தியாவிலுள்ள சிட்டாகாங் (Chittagong).

**31—5—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம் (விமான எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia).

லிஸிசான்ஸ்க் (Lisichansk) பிரதேசம்.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**மாஸ்கோவின் முயற்சி.** 1919-ம் வருஷத்தில் உலகத்தின் ராஜீய முறைகளையும் ஜனசமூகத்தின் பொருளாதார, நாகரீக முறைகளையும் திருத்தியமைப்பதற்காக லெனின் ஏற்பாடு செய்திருந்த கொமிண்டர்ன் என்னும் பொது

வுடமை திட்டத்தை ஒழித்துவிட்டதாக ஸ்டாலின் வெளியிட்டுவிட்டார். நேசநாடுகளுக்கிடையே பிளவும், அச்சுநாட்டுக்குட்பட்ட தேசங்களில் வெருட்டலும் உண்டுபண்ண சாதகமாயிருந்த போல்ஷிவிஸ்டு பூச்சாண்டி மறைந்துவிட்டது. பயமும் நீங்கிவிட்டது.

இவ்விதம் செய்ததிலிருந்து ஸ்டாலின் தத்வஞானி என்று மறுபடியும் காண்பித்துவிட்டான். இது அவனுக்கு மகத்தான வெற்றி. ராஜதந்திர முறையில் ஸ்டாலின்கிராட் வெற்றியைவிட அதிகமானது. இந்த இரண்டு இடத்திலும் நாஸிகளுக்கு இகழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது கோயபல்ஸின் பிரசாரத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது.

உலகத்தில் தொழிலாளர்களாதிக்கம் பெற்ற நிலைமையை உண்டுபண்ண பொதுவுடமைக் கக்ஷிக்காரர்கள் இதுவரையில் மூன்று தடவை பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். 1862-ம் வருஷத்தில் கார்ல்மார்க்ஸும் 1889-ம் வருஷத்தில் பிரெஞ்சு பொதுவுடமைக் கக்ஷித் தலைவரும் முயன்றார்கள். மூன்றாவது ஏற்பாட்டிற்கு மூன்றாவது இண்டர்நாஷனல் அல்லது கொமிண்டர்ன் என்று பெயர் விளங்கிற்று. முதல் இரண்டும் சீர்திருத்த முறைகள், உயர்வான நோக்கமுள்ளவைகள். ஆனால் மூன்றாவது பிரயத்தனம் மாஸ்கோவிலிருந்து நிறுவப்பட்ட உலக அமைப்பின் ராஜீய முறைகளை அடியோடு மாற்றியமைக்கும் நோக்கமுள்ளது. தேசீய ராஜீய வரம்புகளை அழித்து, பணக்காரர்களின் அழிவும் தற்போதைய ஜன சமூகத்தின் நாசமும் ஏற்பட்ட பிறகு இந்த உலகத்தை ஒரு புதிய ஏற்பாட்டில் அமைத்துவிடுவது. கொமிண்டர்ன் என்னும் இயக்கம் உலகத்தை அளாவியிருக்கவேண்டும். மாஸ்கோ கொமிண்டர்னை அடக்கி ஆளவேண்டும்.

இதற்குப் பயந்து ஜெர்மனியும், இதாலியும் கொமிண்டர்ன் எதிர்ப்புக் கோஷ்டியில் சேர்ந்துகொண்டார்கள்.

ருஷ்யாவின் புதிய நடவடிக்கைக்குப் பிரிடனும், அமெரிக்காவும் காரணமாயிருக்கவேண்டும். சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகளும் உதவியிருக்கவேண்டும். 15 வருஷங்களுக்கு முன் டிராட்ஸ்கி தோல்வியுற்றபொழுது போல்ஷிவிஸம் வலுக்குறைய ஆரம்பித்து, ஸ்டாலின் தலைமையின்கீழ், நாகரீக உலகத்தை அடக்கியாளவேண்டியதைவிட்டு, ருஷ்யாவின் முன்னேற்றம் ஏற்பட்டால் போதுமென்று குறைந்துவிட்டது. ருஷ்யாவின் நடவடிக்கை விசேஷமானது. இவ்விதம் செய்து யுத்தத்துக்கு ஸ்டாலின் பேருதவி செய்திருக்கிறான். ருஷ்யாவின் மாரிகால யுத்தம் ஆரம்பித்தது முதல் ஹிட்லர் கொமிண்டர்ன் எதிர்ப்புக் கோஷ்டியைப் பலப்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறான். இப்பொழுது ஹிட்லருக்குச் சீர்கேடுவந்துவிட்டது.

வி வி வி வி வி

**வாஷிங்டன் சம்பாஷணை.** இது இனிது முடிந்துவிட்டது. வருங்கால யுத்த தந்திரத்தைப்பற்றி பூராவான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நமக்கு இவ்வளவுதான் தெரியும். பத்திராதிபர்கள் மகாநாட்டில் மிஸ்ட்டர் சர்ச்சில் பேசும்பொழுது பின்கண்ட விஷயங்களைத் துலக்கினார்.

1. யுத்தப்போக்கு மாறிவிட்டது. காகஸஸை இழந்துவிடுவோமென்ற பயம் நீங்கி ஸ்டாலின்கிராட் வெற்றி கிடைத்துவிட்டது. டொப்ரூக் விழுந்த உடன்காலத்திலேயே வட ஆபிரிக்காவில் அச்சுநாடுகளின் அழிவு ஏற்பட்டுவிட்டது. இதுவரையில் ஏதோ ஒரு இடத்தில் காலதாமதமாக சொல்ப படைகளை இறக்கியதுபோக, இப்பொழுது நாம் முதலில் செல்லுகிறோம். ஏராளமான சாமான்களையும் எடுத்துச்செல்லுகிறோம். நேசதேசங்களின் அதிக உற்பத்திக்காரணமாக நேசதேசத்தாரின் வலு அதிகரித்துவிட்டது, நேசநாடுகள் ஒரு மூச்சாக அடித்து முடிவுசெய்ய உத்தேசித்திருக்கிறார்கள். இதன் மூலம் எதிரி பூராவும் சரணாகதி செய்யும்படியாகச் செய்யப்படுவான்.

2. ருஷ்யாவானது தீரம் பொருந்திய ஒரு பெரிய நண்பன்.

3. இதாலியும் விழுந்து விட்டால் நமக்கு நல்ல அதிர்ஷ்டம் தான். புதிய ஐரோப்பாவில் இதாலிக்கும் ஒரு ஸ்தானம் அளிக்கப்படும்.

4. அமெரிக்காவின் குறிதப்பாத பகல் விமானத்தாக்குதலும், பிரிடிஷாரின் இராக்காலத்தாக்குதலும் இடைவிடாது நடைபெறும். விமான யுத்தத்தை ஆரம்பித்த ஹிட்லருக்கு நல்ல பதில் மரியாதை நடைபெறும்.

5. ஜப்பானின் பேரில் பலமான நடவடிக்கையெடுக்கப்படும். இப்பொழுது ஒவ்வொரு தீவையும் பிடிக்க முயற்சி செய்யப்படும்.

6. யூ படகுகளை அழிக்கும் வேலையும் நடைபெறும்.

ஐரோப்பாவின் கிழக்கு, மேற்கு, தெற்குப் போர்முனையில் ஒரே காலத்தில் நடவடிக்கை ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பால்கன்ஸில் தாக்குதலும், பிரான்ஸிலும் மற்றொரு இடத்திலும் துருப்புகள் இறங்குவதும் நடைபெறும். இதாலியைப் படையெடுப்பது ஒத்திவைக்கப்படும். ஆல்ப்ஸ் மலையிருப்பதால் ஜெர்மனியை இதாலி வழியாகத் தாக்குவது சாத்தியமில்லை. ஜப்பானைத் தாக்குவதும் ஐரோப்பாவில் கிழக்கேயும் மேற்கே கிடுக்கித் தாக்குதலும் எல்லாம் ஒன்றுபட்டு நடைபெறும். நேசநாடுகளின் பிரசாரம் வலுவடையும். மனக்கசப்புள்ள ஐரோப்பா பூராவும் சண்டை ஆரம்பிக்கும் பொழுது தயாராகயிருக்கும்.

வாஷிங்டன் பேச்சுகளின் முடிவை எதிர்பார்த்துக்கொண்டு நேசதேசங்களில் யுத்த முயற்சிகள் நின்றுவிட்டன என்று எதிர்பார்ப்பது தவறாகும். மேமீ 23-ம் தேதி அமெரிக்கப் படைகளின் தளபதியான லெப்டினண்ட் ஜெனரல் ஜேகப் L. டேவார்ஸ் பின் வருமாறு சொல்லியிருக்கிறார். “வாஷிங்டனில் ஏற்பட்ட முடிவுகளை அவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளுடன் சேர்த்துப்பார்க்கக்கூடாது. அநேக மாதங்களுக்கு முன்பே இந்தத் திட்டங்கள் போட்டாகிவிட்டன. எது சிறந்த திட்டம் என்று தான் வாஷிங்டன் மாகாநாட்டில் முடிவு செய்யவேண்டும். திட்டங்களை ஏற்பாடு செய்ய நேசநாடுகள் இதுவரையில் சும்மாயிருக்கவில்லை. சென்ற வருஷத்திலேயே யுத்த தந்திரங்களும் திட்டங்களும் பூர்த்தியடைந்துவிட்டன. உலக யுத்தத்தின் போக்கை அனுசரித்து எவ்வித மாறுதல்களுக்கும் அவைகள் லாயக்குள்ளவைகள்”.

வி வி வி வி வி

**விமான யுத்தம்.** அமெரிக்காவின் கட்டடவேலை நிபுணரான மிஸ்டர் ஹென்ரி கையிஸரின் அபிப்பிராயப்படி பழுது பட்ட மோன், எட்டார் அணைக்கட்டுகளைத் திருத்தியமைக்க 21 மாதங்கள் செல்லுமாம். நாசமாகி இருக்கும் யந்திரங்களுக்குப் பதிலாக யந்திரங்களை அமைப்பதற்கு ஆறு மாதங்களாகுமாம். அப்படியானால் ரூர் பள்ளத்தாக்குகளிலுள்ள யுத்தத் தொழிற்சாலைகள் அநேக காலத்துக்கு உபயோகப்படமாட்டா.

இதே சமயத்தில் பிரிடிஷ் விமானப்படை 8,000 பவுண்டு எடைமானமுள்ள வெடி குண்டுகளை, விமானத்தாக்குதலின் பொழுது ஜெர்மானியர்கள் ஒளிந்து கொள்ளும் ஒளிகளின் பேரில் போட்டு அவைகளையும் துளைத்து வருகிறார்கள். ஹிட்லர் செய்த தீவினைக்குப் பதில் கிடைத்துவிட்டது.

விமானத் தாக்குதல் மட்டும் நமக்கு வெற்றியளித்து விடுமா என்ற விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்யப்போவதில்லை. சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் “இதையும் கையாளுவோம். பலித்தால் பார்ப்போம்.” என்று சொன்னார். அமெரிக்காவிலுள்ள அலெக்ஸாண்டர் ஸெவெர்ஸ்கி போன்ற உத்சாகிகள் விமான யுத்தம் எதிரியை முறியடித்து விடுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். 20,000 வெடி விமானங்களிருந்தால் யுத்தம் சீக்கிரம் முடிவடைந்து விடுமென்று விமானப்படை சீப் மார்ஷல் ஹாரிஸ் சொல்லுகிறார். “அமெரிக்காவும் பிரிடனும் ஜெர்மனியைவிட ஏராளமான விமானங்களை உற்பத்தி செய்வதால், இவைகளை உபயோகித்துக் கூடுமானால் வெற்றி பெறுங்கள்” என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறார். விமானப்படையெடுப்பு டார்ட்மண்டிலும் டஸ்ஸல்டார்பிலும், எஸ்ஸனிலும், ஜெனுவிலும், ஸார்டீனியாவிலும், பான்டலேரியாவிலும் நடைபெற்று வருகிறது. இவைகள் தாக்குதல்களில்லை. மகத்தான யுத்தங்கள். சதாகாலமும் சர்வதேசங்களிலும் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

**ஜப்பானை விமான மூலம் தாக்க திட்டங்கள்.** இதேவிதமாக ஜப்பானையும் ஏன் தாக்கக்கூடாதென்ற பிரச்னை கிளம்புகிறது. ஜெர்மனியின் விசாலமான பரப்புகளைவிட ஜப்பானின் குறுகிய அடர்த்தியான முக்கியமான லக்ஷியங்கள் நமக்கு உபயோகமுள்ளவை. அரக்கான், பாபுவா யுத்தங்களின் படிப்பினையானது, காடுகளில் ஒளிந்து கண்ணாமூச்சியாடுவதுபோலும், மலைகளிலும் சண்டை செய்வதும் ஜப்பான் சம்பந்த மட்டில் உபயோகமில்லாதது. விமானப் படையெடுப்பினால் பிரிடனை ஜயித்துவிட வேண்டுமென்று ஹிட்லர் போட்ட திட்டம் பலிக்கவில்லை. இதற்குக்

காரணம் விமானப்படை அதிகமாகயில்லை. ஜப்பானைத் தாக்குவதற்கு நமக்கு விமான பலம் அதிகமாகயிருக்கிறது. வெகுதூரம் பறந்துசென்று குண்டு வீசும் விமானங்கள் கட்டியான பிறகு ஜப்பானைத் தாக்குவது சுலபமே.

வி வி வி வி வி

**அட்டுத்தீவு.** ஜப்பானைத் தாக்குவதற்கு விமான தளங்கள் தேவை. சீனா ஒன்றாக இருக்கலாம். அட்டு அதைவிட சிலாக்கியமானது. அநேக மாதங்களுக்கு முன் ஆரம்பித்த அமெரிக்க நடவடிக்கையானது, டுனிஸியாவின் வீழ்ச்சிக்குப்பின், அட்டுத்தீவில் அதிகரித்துவிட்டது. ராட் தீவுகளில் ஒன்றான ஆண்ட்ரியானாப்ஸ் என்பது முதலில் விழுந்தது. அடுத்தபடியாக ஜனவரியில் ஆம்சிட்கா விழுந்தது. அட்டுத்தீவைப் பிடித்து கிஸ்காவை இரு பக்கத்திலிருந்தும் தாக்குவதென்று அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது.

ஜப்பானுக்கு வடக்கேயுள்ள குரில் தீவுகளிலுள்ள பரமாஷிரா என்னும் நகரத்திலிருந்து அட்டு 800 மைல்கள் தூரத்திலிருக்கிறது. அட்டு விழுந்துவிட்டால் ஜப்பானை விமானங்களால் தாக்கும் ஏற்பாடு சீக்கிரத்தில் நடைபெற சாதகம் ஏற்படும்.

அமெரிக்கர்கள் விஷவாயு பிரயோகம் செய்கிறார்களென்று குற்றம் சாட்டி ஜப்பானியர்கள் ஒலிபரப்புகிறார்கள். இது அபாண்டமான பொய்.

வி வி வி வி வி

**அச்சுப் பிரசாரம்.** டுனிஸியாவின் கதை முடிந்து விட்டது. கூக்குரல் மட்டும் ஓயவில்லை. எதிர்பாராத வண்ணம் நேசநாடுகளுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. ஏராளமான கைதிகள் பிடிபட்டுவிட்டார்கள். உயிருள்ள ஒவ்வொரு ஜெர்மானியனும் பிடிபட்டுவிட்டான். இந்த வெற்றியை ஸ்டாலின்கிராட்டுக்கு சமமானதாகச் சொல்லலாம்.

அச்சு நாடுகள் இதை மறைத்துக்கூறி அவர்களுக்கு லாபம் ஏற்பட்டுவிட்டதென்று சொல்ல முயலுவார்கள். யுத்தம் நடைபெற்ற ஆறு மாத காலத்துக்குள்ளாக அட்லாண்டிக் சமுத்திர அரண் பக்காவாகச் செய்யப்பட்டதென்றும், மத்தியதரைக்கடல் அரண் ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் ஜெர்மனி பிரசாரம் செயதுவருகிறது. கிழக்குப் பிராந்தியத்தில் பான்ஸர் படைகளை உபயோகித்து யுத்தம் துவங்குமுன் பின்பக்கம் பத்திரமாகச் செய்யப்பட்டுவிட்டதென்று ஹிட்லர் வெளியிடுகிறான். இதன் அர்த்தம் விளங்கவில்லை. ஹிட்லரின் ஐரோப்பாவிற்கு பிரிடிஷ் அமெரிக்கப்படைகளிடமிருந்து ஏற்படும் பயம் அதிகரித்திருக்கிறது. நேசநாடுகள் மேற்குப் பக்கத்திலிருந்தும், தெற்குப் பக்கத்திலிருந்தும் படையெடுக்கலாம்.

ஐந்தொகை போட்டுப் பார்ப்போம். ஆறு மாத காலத்துக்குள்ளாக ஹிட்லர் தற்காப்புகள் தயார் செய்தானென்பது வாஸ்தவம். ஆகிலும் நேசநாடுகளும் சும்மாவிருக்கவில்லை. பெங்காசியிலிருந்து ரோமல் வெளியேறியிருந்தால் வட ஆபிரிக்காவில் அமெரிக்கர் இறங்கியிருக்கமாட்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் கூடியிருக்கமாட்டார்கள். புதிய நேசதேசத் துருப்புகளுக்கும் யுத்த அனுபவம் ஏற்பட்டிருக்காது. 6 மாதங்கள் இருவருக்கும் உபயோகமுள்ளது. ஆகிலும் அப்பொழுது ஹிட்லருக்கு விசேஷ நஷ்டம் உண்டாகியிருக்கிறது.

மற்றொரு முக்கியமான விளைவும் உண்டு. ஹிட்லர் மத்தியதரைக்கடலை இழந்துவிட்டான். நேசநாடுகள் அதை அடைந்துவிட்டன. ஜிப்ரால்டரிலிருந்து போர்ட்ஸெயிட் துறைமுகத்துக்கு வழி திறந்துவிட்டது. கடலாதிக்கம் நமக்குக் கிடைத்துவிட்டது. இதன் மூலம் நேசதேசத் துருப்புகளின் நடமாட்டத்துக்கு சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. ஹிட்லரின் ஐரோப்பிய அரண் சுலபமாகத் தாக்கப்படலாம். பாரஸீக வளைகுடாவுக்கும் இந்தியக் கடற்கரைக்கும் ஜப்பான் வசமுள்ள நாடுகளுக்கும் துரிதமாகச் செல்லலாம். டைம்ஸ் பத்திரிகை சொல்லுவதுபோல "எகிப்திலும், ஸிரியாவிலும், பாரஸீகத்திலுமுள்ள துருப்புகளின் நடமாட்டத்துக்குச் சௌகரியமேற்பட்டிருக்கிறது. துருக்கியை அச்சுநாடுகள் தாக்கினால் அதற்கு உதவியளிக்கலாம். பால்கன் தீபகற்பத்தையும் நாம் சுலபமாகத் தாக்கிவிடலாம்" என்பது தெளிவானது. இதை விரு இராக்கிலும் இரானிலுமுள்ள எண்ணெய்யை பல இடங்களுக்குத் துரிதமாக அனுப்பலாம். ருஷ்யாவுக்குச் சாமான்கள் தரை மூலமாக அனுப்பலாம். ஸூயஸ் வழியாகக் கப்பல்கள் கொண்டுபோனால் 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மீதப்படும். மத்தியதரைக்கடலில் நடமாடும் நேசதேச நீர்மூழ்கிகளை தூரக்கிழக்கிலுள்ள ஜப்பானியக் கடல் மார்க்கங்களுக்கு அனுப்பிவிடலாம்.

**இதாலி.** யுத்தத்தை நடத்துவதென்று முஸோலினி முடிவு செய்துவிட்டான். மேமீ 29-ம் தேதி நடைபெற்ற கக்ஷிக்கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது. தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஜெர்மனியிலுள்ள இதாலியத் தொழிலாளர்கள் தாயகம் திரும்புகிருர்கள். நேசதேசத்தாரின் படையெடுப்புக்குப் பயந்து ஹிட்லர் ஸார்டினியாவுக்குத் துருப்புகளை அவசரமாகக் கொண்டு போகிருன்.

பிரிடிஷ் அயல்நாட்டு காரியதரிசியான மிஸ்ட்டர் அந்தோனி ஈடன் முஸோலினிக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிருர். நாஸி, பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களும் அவர்களுடைய கொள்கைகளும் அழிந்துபோகும் வரையில் இதாலி வெடி விமானங்களால் தாக்கப்படும். ஒரு சமயம் லண்டனைத் தாக்க தனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று முஸோலினி ஹிட்லரிடம் வேண்டிக்கொண்டான். சக்கரம் சுழண்டு வந்துவிட்டது. இதாலி தாக்கப்படுகிறது. வார்ஸாவையும், ராட்டர்டாமையும் அச்சு நாடுகள் ஞாபகப்படுத்திக் கொள்ளட்டும்.

வி வி வி வி வி

**பெரிய வெடி குண்டுகளும், சிறிய வெடி குண்டுகளும்.** சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து சிறிய வெடி குண்டுகளைவிட பெரிய வெடி குண்டுகள் அதிக பிரயோஜனமுள்ளவை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 250 பவுண்டு வெடிகுண்டைவிட 1,000 பவுண்டு வெடிகுண்டு நான்கு மடங்கு பெரியது என்பதுடன், அதன்உபயோகமும் அதிகமானது. வெடிகுண்டினுல் ஏற்பட்ட குழியை கவனிப்போம். 250 பவுண்டு எடைமானமுள்ள வெடிகுண்டால் ஏற்பட்ட நான்கு பிளவுகளும் சீக்கிரமாக மூடப்பட்டுவிடலாம். இருப்புப்பாதைகளுள்ள பிரதேசமாகயிருந்தால், மறுபடியும் புதிய தண்டவாளங்களை அமைத்து போக்குவரவு மறுபடி ஆரம்பித்துவிடலாம். ஆனுல் 1,000 பவுண்டுகள் எடைமானமுள்ள குண்டு உண்டாக்கும் பள்ளத்தை மூடுவதற்கு நான்கு நாட்கள் செல்லும். மேற்குப் பாலைவனப்போரில் ஏற்பட்ட அனுபவம் இதுதான்.

பெரிய வெடிகுண்டுகள் உபயோகிப்பதிலிருந்து நாசவேலைதான் ஏற்படுமென்று எண்ண வேண்டாம். சிறிய வெடிகுண்டுகளைவிட நான்குமடங்கு அதிகமான சேதத்தை பெரிய குண்டு செய்துவிடுமென்ருலும், சிறிய வெடிகுண்டுகள் ஏற்றிச்செல்லும் விமானங்களைவிட நாலில் ஒரு பங்கு விமானங்களில் பெரிய வெடிகளை ஏற்றிச்செல்லலாம். இது பெரிய லாபம். அதாவது 4-ல் 1 பங்கு மனிதர்களிருந்தால்போதும். விமான எண்ணெய்யும் கால் பாகம் உபயோகித்தால் போதும். ஆள் சேதம் ஏற்பட்டாலும் குறைவாகத்தானிருக்கும்.

1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலிருந்து பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனி மீதும் இதாலி மீதும் 8,000 பவுண்டு எடைமானமுள்ள குண்டுகளைப் போட்டிருக்கின்றன. 4,000 பவுண்டு எடைமானமுள்ள குண்டுகளைப்போடுவது 1941-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் துவங்கியது.

வி வி வி வி வி

**ருஷ்யா.** ருஷ்யாவில் அமைதி காணப்படுகிறது. 8,00,000 ஜனங்கள் கொண்ட 200 டிவிஷன் துருப்புகள் மகத்தான சண்டைக்குத்தயாராக யிருக்கிருர்கள். இரண்டுபேரும் ஸ்தலங்களைப் பிடிப்பதற்காக சூழ்ச்சி செய்து வருகிருர்கள். புசல் எந்த நேரத்திலும் கிளம்பிவிடும்.

மே மாதம் 26-ம் தேதி லண்டனில் பிரிடிஷ் ருஷ்ய நட்பு ஏற்பட்ட வருஷாந்திர தினம். யுத்தத்தின்பொழுதும் யுத்தம் முடிந்தபிறகு 20-ம் வருஷம் வரையிலும் பிரிடனும் ருஷ்யாவும் ஒத்துஉழைப்பதென்று ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தானபொழுது நிலைமை பயங்கரமாகயிருந்தது. ஸ்டாலின்கிராட்டை நோக்கியும் பாகுவை நோக்கியும் ஜெர்மனி முன்னேறி வந்தது. மத்தியக் கிழக்கைத் தாக்க வசதியுள்ள ஒரு ஸ்தானத்தில் ஜெர்மன் சேனை தயாராக இருந்தது. இந்த சமயத்தில் சர்ச்சில் மாஸ்கோவுக்கு விஜயம்செய்து ஸ்டாலினை சந்தித்து ஒப்பந்தம் செய்துகொண்டார்.

ஒரு வருஷத்துக்கு பின் நிலைமை மாறிவிட்டது. ருஷ்யாவின் தீவிரமான மாரி கால யுத்தம், டுனிஸியா வெற்றி, ஐரோப்பாவில் விமான யுத்தம் எல்லாம் யுத்தப் போக்கை மாற்றிவிட்டன. நேசதேசத்தார்கள் தற்காப்பு முறையிலிருந்து முன்னேற்ற யுத்தம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

**படை சேமிப்பு.** இந்திய விமானப்படையில் அநேகர்கள் சேருவதாகக் கணக்குகள் குறிப்பிடுகின்றன. 1942-ம் வருஷத்தில் சராசரி இருந்ததைவிட 1943 மார்ச்சு மாதத்தில் சேமிப்பு 600 சத விகிதம் அதிகரித்திருக் கிறதென்று தெரியவருகிறது. மதராஸ் மாகாணத்திலிருந்து அநேகம்பேர்கள் சென்றிருக் கிறார்களென்பதில் பெருமைகொள்ளுகிறோம். இந்தியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விமான உத்தியோகஸ்தர்கள், அதிக நபர்கள் வருவதோடு, அவர்களின் தரமும் அதிகரித்து வருகிறது உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களும் சர்வ கலாசாலை படிப்பு பெற்ற மாணுக்கர்களும் விமானப் படையில் சேர்ந்துகொள்ளுகிறார்களென்றும் சொல்லுகிறார்கள்.

---

# யுத்தத்தில் விமானப்படை பலத்தின் முக்யத்வம்.

(விமான சீப் மார்ஷல் சார்ல்ஸ் போர்ட்டல்).

யுத்த தந்திரத்தில் விமானப்படை விசேஷ மாறுதல் செய்திருக்கிறது. ஒவ்வொரு யுத்தம் செய்யும் தேசத்தின் நடவடிக்கையை இது முற்றிலும் மாற்றிவிட்டது.

இந்த யுத்த ஆரம்பத்தின் முன்பே இவ்வுண்மைகளைப் பலரும் உணர்ந்திருந்தனர். ஐரோப்பிய தேசங்களில் பல அடிமைப்படுத்தத் தாக்கும் நாஸி ஜர்மனியின் நோக்கத்தால் பயப்படுத்தப்பட்டு, 1930-ம் வருஷத்தில் விமானத் தாக்கல்களை எதிர்க்கவேண்டிய தற்காப்பு வழிகளை அதிகமாயத் தயாரித்தன.

பெரியதோர் நாட்டின் சேனையில் கவசம் முதலிய தளவாடங்களையும், அந்தச் சேனையை நடத்தவும் யார் ஜவாப்தாரியோ அவர் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். இல்லையேல் தோல்விதான் அவன்செய்த சிறு பிழையால் அடையக்கூடியதாகும். ஆகையி னுலேதான் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தளவாடங்களை, அவைகளை உடனே உபயோகப் படுத்தாமல் மெதுவாய் உபயோகப்படுத்துவதாகும். நூதனமான சாமான்களை உபயோகிப் பதும், பழைய இயந்திரங்களை எப்பொழுதும் உபயோகிப்பதும் அபாயகரமானதாகும். முக்கியமான புது தளவாடங்களோடு கூடிய சைனியங்களைத் தகுதியான முறையிலே உபயோகிக்க சீக்கிரமாய்க் கற்றுக்கொள்ளும் தேசம் என்றும் வெற்றியையேயடையும்.

தற்போதைய யுத்தத்தின் ஆரம்பத்திலே ஜெர்மனி எதிரிகளை நாசப்படுத்தி, பலமான எதிர்ப்பை ஏற்படுத்துமுன், பெரியதோர் வெற்றியை அதாவது முடிவான வெற்றியின் சின்னங்களை அடைந்தது. விமான பலத்தை மற்றைய நாடுகள் உபயோகித்ததைப்போலில் லாமல், அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டதால்தான் இந்த யுத்தத்தில் ஜெர்மனி வெற்றி அடைந்தது.

**யுத்தத்திற்கு முன்பு.**

சென்ற யுத்தத்திற்குப்பிறகு தன்னை கிரேட்பிரிட்டன் திரும்ப பலப்படுத்த தாமதித்த தால் நாலிற்கு ஒன்றான விமான பலத்தோடு நாஸி ஜெர்மானியை எதிர்த்துச் சண்டைபோட ஆரம்பித்தது.

ராயல் விமானப்படை பறக்கவிட்ட ஒவ்வொரு விமானத்திற்கும் எதிரியாக நான்கு விமானங்களை ஜெர்மனி பறக்கவிட்டதன்னியில், பழமையான பல விமானங்களை ராயல் விமானப்படை உபயோகிக்கவேண்டியிருந்தது.

யுத்தத்தின் போக்கிலுள்ள மாதங்களில், நம் சைனியத்தில் நூதனமானதும், பல மானதுமான விமானங்களை உண்டாக்கவேண்டிய பெரியதோர் முயற்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த முயற்சிகள் வேண்டியகாலத்திலே பிற்கால யுத்தத்தின் போக்கை தலைகீழாக மாற்றவேண்டியது பயனளித்தது. ஆனால் கிரேட்பிரிட்டனைப் பத்திரமாகப் பாது காக்கவேண்டிய பலத்திற்குவேண்டிய அளவு போதுமான விமானங்கள் ராயல் விமானப் படையில் இல்லை.

ஒருபுறம் பிரிட்டனில் முக்கியமான எதிரி விமான இலக்குகளையும், உலகத்தில் விமானத் தாக்குதலால் காக்கக்கூடிய லண்டனையும் சேர்த்து எதிர்த்துவரும் எதிரிகளின் விமானங்களை எதிர்க்கவேண்டிய அளவு சண்டையிடும் விமானங்களும் நம்மிடம் போதுமான அளவு இல்லை. அடுத்தாற்போல் எதிரியைத் தாக்கி குண்டுபோடுவதற்குவேண்டிய அளவு, குண்டுபோடும் விமானங்களும் நம்மிடம் இல்லை.

இந்த உண்மைகளை இன்றையதினம் பலப்படுத்திச் சொல்லவேண்டிய காரணமென்ன வென்றால், பழைய தர்க்கங்களைத் திரும்பவும் கொண்டுவருவதற்கில்லை. ஆனால் ராயல் விமானப்படை ஆரம்பத்தில் எந்நிலையில் இருந்தது என்பதையும், இன்றைக்கு எத்தகைய வகையில் முன்னேறி வேலை செய்கிறது என்பதையும் விளக்கமாகச் சொல்லவேதான். நம் விமான பலம் வேண்டிய அளவு உண்டாக்கப்படவில்லை. ஆகையினால் நம்மிடத்தில் உள்ள வைகளைப் பிரித்துவிட்டு, முக்கியமாய் அனுப்பவேண்டிய இடங்களுக்கு அனுப்பவேண்டியது தான், நாம் இப்பொழுது செய்யக்கூடியது.

சகஜமான முதல்தேவை நமக்கு என்னவென்றால், பிரிட்டனை தற்காத்துக்கொள்ள வேண்டியதே. யுத்தம் ஐரோப்பாவில் நீடித்து நடந்தால், இத்தேசத்தின் பாதுகாப்பு பிரதானமான தன்னியில், ஐக்கிய நாடுகளுக்குவேண்டிய தளவாடங்களை உற்பத்தி செய்வதைக் கொஞ்சமும் தடைப்படுத்தக்கூடாது என்பதும் அவசியம்.

ஆகையினால் சண்டையிடும் விமானங்கள் கட்டுவதிலும், நம் தேசத்திற்குவரும் சமுத் திரங்களில் நம் கப்பற்படைகள் பத்திரமாக வைத்துக்கொள்ளுவதற்கு உதவியாயிருக்கிறது மான கடற்கரை விமானப்படை கட்டுவதிலும், நாம் நம் பூரா கவனத்தையும் செலுத்த வேண்டும். இத்தாலி யுத்தத்தில் ஈடுபட்டபின், மத்தியதரைப் பிரதேசத்திலே பலமான படைகள்வைத்து, நமது சாம்ராஜ்யத்தை பாதுகாப்பதின் முக்கிய கொள்கையான மத்திய கிழக்குப் பிரதேசங்கள், இந்திய சமுத்திரம் இவைகளின் ஆட்சியை அவர்கள் எகிப்தை ஜயித்து அடையாமல் பாதுகாக்கவேண்டியிருந்தது.

## நிலைமை பலமாகிறது.

ஒவ்வொரு இடத்திலும் நாம் பலமாயிருக்கமுடியாது. முதலில் நாம் செய்யக்கூடிய தானது, முக்கியமான இடங்களில் பலமாயிருந்து அவைகளைப் பாதுகாத்தும், முக்கியமில் லாத இடங்களில் பலமில்லாதிருந்தும் நாம் அடையும் முக்கிய வெற்றிகளேதான், எதிரியின் யுத்த தந்திரத்தோடுகூடிய மத்தியஸ்தானமும், முக்கிய போக்குவரத்துகளுமாகிய எதிரி யின் சௌகரியங்கள் நமது பலமின்மையை அதிகப்படுத்தியது.

அதன் பயனாய் நமது ராயல் விமானப் படையை கேலி செய்யும் நிலைமையில் நாம் பல பெரிய தோல்விகளையடைந்தோம். உலகம் முழுவதும் வேண்டிய விமானப்படை நம்மால் வைத்திருக்க முடியவில்லை என்பது நமக்கு வருத்தத்தையே தருகிறது. அதனாலே நமது தரைப்படைகளும் கடற்படைகளும் விமான உதவியின்றி சண்டைசெய்ய விடப்பட்டன.

துரதிர்ஷ்டவசமாய் அப்படியேதான் நடக்கவேண்டியிருந்தது. அதனைத் தடுக்கமுடிய வில்லை. நாம் நமது யுத்தத் தளவாடங்களையும், சைனியங்களையும் இதுகாறும் பார்த்து ஆங்காங்கு அனுப்பியதுபோலன்றி, இன்னும் பல இடங்களுக்கு அனுப்பியிருந்தோமானால் நாம் இப்பொழுது பலமில்லாதுபோய் யுத்தத்தை இழந்து தோற்றுப்போயிருப்போம்.

நமக்கு இப்பொழுது நிலைமை பலப்படுகிறது என்று நான் சந்தோஷத்தோடு கூறுகி றேன். ஒருபுறம் ஜெர்மனி, ருஷ்யாவின் பெரிய பிரதேசங்களிலே தனது விமானத் தளவாடங்களை ஒரு பாகத்தை வைக்கவேண்டியவாறு ருஷ்யாவுடன் புதிய யுத்தம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மனியை எதிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகளில் விமானங்களுடன் ருஷ்ய விமானப்படையும் சேர்ந்திருக்கின்றன.

அடுத்தாற்போல் கணக்கற்ற அமெரிக்க விமானங்கள் ராயல் விமானப் படைக்கு அனுப்பப்பட்டதானது, இப்பொழுது மிகவும் கணக்கில்லாமல் வந்து குவிந்துகொண்டிருக் கின்றன. இந்த முயற்சியும், நம்முடைய சொந்த முயற்சிகளாய்ச் சேர்ந்து அச்சுநாட்டு விமானப்படைக்குமேல், ஐக்கிய நாட்டு விமானப்படை உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பலம் பொருந்தியதாய் இருக்கச் செய்யும் காலத்தை நாம் அடைகிறோம்.

விமான பலம் யுத்தத்திற்கு முதன்மையானது என்பது பலராலும் யுத்தத்திற்கு முன்பே உணரப்பட்டது. நம் அனுபவங்கள் விமான பலத்தின் முக்யத்வத்தை எல்லோ ருக்கும் தெளிவாய்க் காண்பித்தது. ஒரே பலமுள்ள 2 எதிரிகளிடையே நடைபெறும் யுத்தத்தில் விமானபலம் யாரிடம் அதிகமாய் உள்ளதோ அந்தக் கக்ஷிதான் முடிவில் வெற்றி யடையும். அதுபோல தரையிலும், கடலிலும் சண்டை நடக்கும்போதும் விமான பலத் தால்தான் ஜயம் ஏற்படும்.

முடிவாக யுத்தம் நடத்தவேண்டும் என்ற எதிரியின் எண்ணத்தை விமான பலம் தகர்க்கிறது. அதுவேதான் நமது முடிவான குறியாகும். எதிரியின்மேல் பொதுவாக விமான பலம் அதிகமாய் நாம் அடையவேண்டும் என்றுதான் நம்மிடம் இருக்கவேண்டிய ஒரு முக்கியமான குறிக்கோள்.

## இந்தியாவிற்கு வேண்டியவை.

ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டதானது இந்தியாவிலும், தூரக்கிழக்கிலும் புதிதான பல தேவைகளை ஏற்படுத்திவிட்டது. மத்தியக் கிழக்கிலே உள்ள நம் ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்டு வரும் அதிகரித்த பயத்தினால் அங்கே நாம் நமது சைனியங்களை அதிகப்படுத்தவேண்டியதாயிற்று. நமது கப்பல்களுக்கு எதிரியாய் பல யூ-படகுகள் சண்டை செய்வதால அதிகப்பட்ட தளவாடங்களை ஸப்மரீன்களைத் தாக்கி நசுக்கவும், கடலினை வேவு பார்க்கவும் பிரயோஜனப்படுத்தவேண்டியதாயிற்று. நமது விமானங்களின் எண்ணிக்கை அதிகமாக ஆக, அவைகள் வேவு பார்த்துவரும் சமுத்திரத்தின் அளவும் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இதற்குத் தகுந்தாற்போல பூரா சமுத்திரங்களையும் வேவு பார்க்க நாம் நமது விமானத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பீரங்கிகளை ஸ்தாபித்து அதன் குண்டுகளால் வரும் கப்பல்களைத் தகர்க்கக்கூடிய அத்தகைய குறுகிய கடல்களிலே கப்பல்கள் சண்டை செய்வது இயலாது. ஆகையினாலே அந்தக் கப்பற்படைகளின் வேலையையும், நமது ராயல் விமானப்படையே எடுத்துக்கொண்டு அத்தகைத்த இடங்களையும் தாக்கிவருகின்றன என்பதை இந்த யுத்தத்தின் அனுபவம் நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது, இந்த முறையிலே பல பெரிய கடல்கள் என்று சொல்லக்கூடியவை குறுகிய கடல்களாக ஆகின்றன. மத்தியதரைக்கடலும் இந்த வர்க்கத்தை சேர்ந்துகொண்டு வருகிறது.

இந்த யுத்தத்தால் ஏற்பட்ட மற்றொரு தேவையாவது நெடுந்தூரம் பிரயாணம் செய்யத்தக்க விமானங்கள் யுத்த தடவாளங்களை ஏற்றிச்செல்லுவதற்கு வேண்டியதாகும். எதிரி இடத்தில் பழமையான குண்டுபோடும் விமானங்கள் அதிகமாயிருந்ததால் மனிதர்களையும், ஸப்ளைகளையும் அனுப்புவதற்கும், மிகவும் உபயோகமாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொண்டான். நாம் வெகு நாட்களிற்குபின் நம்மை திரும்பவும் பலப்படுத்திக்கொள்ள ஆரம்பித்ததால் நம்மிடம் பழைய விமானங்கள் அதிகமில்லை. ஆகையால் நாம் குறைவான போக்குவரத்து விமானங்களை உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. அத்துடன் சண்டைசெய்யும் சில விமானங்களையும், சாமான்களையும் ஏற்றிச்செல்ல உபயோகப்படுத்தவேண்டியிருந்தது. நமக்கு தேவையான போக்குவரத்து விமானங்கள்பெறுவதற்கு வெகு நாட்களாகும்.

விமானப்படையை விருத்திசெய்வதென்பது, குடைகளை ஏற்றிச்செல்லுவதும், இஞ்ஜினில்லாத விமானங்களைக் கட்டிக்கொண்டுபோவதும் ஆகும். இஞ்ஜினில்லாத விமானங்களைக் கட்டுவதும், விமானிகளுக்கு பயிற்சியளிப்பதும், உபயோகமுள்ள விமானப்படையை தயார்செய்வதை சிறிது பாதிக்கும்.

## மூலாதாரமான விமானங்கள்.

இப்பொழுது பிரயோஜனப்படவேண்டியிருக்கிற பல வழிகளுக்கும் தகுந்தாற்போல நடக்க விமானங்களை நாம் உபயோகிக்க முயற்சி செய்துவருகிறோம். கனமான குண்டு போடும் விமானப் போக்குவரத்துகளுக்கும், நெடுந்தூரம் பிரயாணம்செய்து சமுத்திரத்தில் வேவு பார்க்கவும், சுரங்க வெடி பாவுவதற்கும், காயம்பட்டவர்களைப் பத்திரமான இடங்களுக்குத் திருப்பிக் கொண்டுவரவும் உபயோகிக்கலாம். சண்டைபோடும் விமானங்களை உயரங்களில் வேவுபார்க்கவும், சேனையுடன் யுத்த தந்திரங்களை அறிந்துவரவும், தாழ்ந்து பறந்து குண்டுபோடவும், பீரங்கிகளால், கப்பல்களையும், தரைமீதுள்ள இதர லக்ஷியங்களையும் தாக்கவும் உபயோகப்படுத்தலாம். விமானங்களை வேண்டியபடி பிரயோஜனப்படுத்துவதென்றால் அதன் தேவைக்கதிகமாகியும், நம்மிடத்தில்வேண்டிய அளவு விமானங்கள் இல்லாமலும் இருப்பதேதான்.

அதிர்ஷ்ட வசமாய் ராயல் விமானப்படையில் அதிகமாய் விமானம் உற்பத்திசெய்யப்பட்டு சேர்க்கப்படுகின்றன. பிரிடிஷ் விமான உற்பத்திசாலை யுத்தத்திற்கு முன்போல் இல்லாமல் இப்பொழுது அதிகமான விமானங்களை உற்பத்திசெய்கிறது. இந்தத் தொழிற்சாலையில் பிரிட்டிஷிலேயே மற்ற எல்லாத்தொழிற்சாலைகளையும்விட அதிமான பேர்கள் வேலை செய்கிறார்கள்.

எதிர் விமானத் தாக்குதல்களின்றும் பிரிட்டனைக் காப்பாற்றத்தக்க ஒரேவழியான, சண்டையிடும் விமானங்களை உற்பத்தி செய்வதிலேயே தன் முழு கவனத்தையும் வெகு

நாட்கள்வரை பிரிட்டிஷ் விமானத்தொழிற்சாலை செய்திருந்தது. ஹரிக்கேன் விமானங்களையும், ஸ்பிட்பயர் விமானங்களும் செய்து அனுப்பப்பட்டு ராயல் விமானப்படையில் சேர்ந்ததினால் தான் 1940-ம் வருஷம் பிரிடிஷ் யுத்தத்தில் ராயல் விமானப்படை ஒரு பெரியதோர் முடிவான வெற்றியை அடைந்தது. சண்டையிடும் விமானங்கள் இன்னும் அதிகமாய்த்தேவையாயிருக்கின்றன. இப்பொழுது பிரிடிஷ் விமானத் தொழிற்சாலை தன் கவனத்தை அதிகமாய் கனமான குண்டு போடும் விமானங்களை உண்டுபண்ணுவதிலும், நாலு இஞ்ஜின்களுடைய பெரிய குண்டுபோடும் விமானங்களையும் ஒவ்வொரு மாதத்திலும் கணக்கில்லாமல் உற்பத்தி செய்வதில் செலுத்துகிறது.

## அமெரிக்க உதவி.

அமெரிக்காவின் இந்த அதிகமான உதவியில்லாமல்போனால் ராயல் விமானப்படை இன்றைக்கு இருக்கும் நிலையை அடைந்திருக்கவே முடியாது. சிறிதுகாலமாக அமெரிக்க லாக் ஹீட்ஹட்சன் குண்டுபோடும் விமானங்கள், கடற்கரைப் பாதுகாப்பு விமானங்கள் செய்து வந்த வேவுபார்க்கும் வேலைகளைச் செய்தது. அமெரிக்கக் காட்டில் சண்டையிடும் விமானங்களும், டக்ளஸ், கிளென்மார்ட்டின் குண்டுபோடும் விமானங்களும் மத்தியக் கிழக்கிலே யுத்த நடவடிக்கையில் பிரசித்தி பெற்றிருக்கிறது.

அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னேயே இவைபோன்றவைகளையும் இன்னும் இதர விமானங்களையும் சேர்ந்து ராயல் விமானப்படை பலப்படுத்தப்பட்டது. அதிகமான உற்பத்தி இப்பொழுது செய்ய இயன்றதோடு, உலகத்தில் பல பாகங்களிலிருந்து வந்தவைகளைத் தவிர அமெரிக்க விமானங்களாலும், விமான நிலய ஆட்கள் ஐக்கிய நாட்டின், ராயல் விமானப்படைதான் இவ்வளவு பலமாகப் போகிறோமே என்று கனவிலும் நினைக்காத அளவு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

தற்காப்புக்கு விமானப்படை இப்பொழுது மிகவும் அதிகமானதாயும் அவசியமானதாயுமான தேவையாயிருக்கிறது. அவைகளைப்பற்றியும், நாம் எவ்வாறு அவைகளைச் சாதிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் நான் உங்களுக்கு விளக்கியிருக்கிறேன். யுத்தத்தின் முக்கியமான கொள்கையானது, எவ்வளவு சிறிய அளவு முடியுமோ அத்தனை அளவு தற்காப்பிற்கும் எத்தனை பெரிய அளவு தாக்குதலுக்கு வைத்துக்கொள்ளவேண்டுமோ அத்தனை அளவு தாக்குதலுக்கும் நம் விமானங்களைப் பயன்படுத்துவதுதான். தற்காப்புக்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்யப்பட்டு தற்காப்பில் விடப்பட்டுவிட்டன. ஆகையினால் நாம் இப்பொழுது தாக்குவதற்கும் அதனால் முடிவான வெற்றியடையவும் வேண்டிய அளவு உற்பத்தி செய்வதிலேயே நம் கவனத்தை மிகவும் உன்னிப்பாய்ச்செலுத்தவேண்டும்.

ஜெர்மனியை எதிர்த்து குண்டுபோடத்தக்க அளவு குண்டுபோடும் விமானங்கள் எத்தனை வேண்டுமென்பது யுத்தம் ஆரம்பித்தது முதல் நம் எல்லோருக்கும் தெரிந்ததே. சிறிது காலம் முன்வரை நம் குண்டுபோடும் விமானப்படை மிகவும் சிறிதாகவே இருந்தது. இருந்தாலும் பலமான தாக்குதல்களை அந்த சிறிய விமானப்படை ஜெர்மனியின் கடற்கரைகளிலும், தொழிற்சாலை ஸ்தலங்களிலும், போக்குவரத்துகளிலும் செய்துவந்தது. இப்படியாக ஜெர்மனியை மேற்கு யுத்த அரங்கத்தில் ஒரு பெரியதோர் நீண்டதூரம் பிரயாணம் செய்து தாக்கும் குண்டுபோடும் விமானங்களை வைக்கவும், சில சமயங்களில் கிழக்கு யுத்த அரங்கத்திலிருந்திருந்தால் பயன்படத்தக்க தன் சண்டைபோடும் விமானங்களில் மூன்றில் ஒரு பங்கை பிரிடிஷ் விமான எதிர்ப்பைச்சமாளிக்க மேற்கு ஐரோப்பாவில் வைக்க வேண்டி இருந்தது.

ஐக்கிய நாடுகளின் யுத்த தந்திரத்தை நிலைநிறுத்த இந்தச் சிறிய விமானப்படை பேருதவியாயிருந்தது. இருந்தாலும், இப்பொழுது, அவைகள் அடையும் பலன்களையும் அமெரிக்க விமானங்களுடன் சேர்ந்து இனி அடையப்போகும் பலன்களையும், அவைகள் இதுவரை அடைந்த பலங்களோடு ஒத்திட்டுப் பார்த்தால் அவைகள் சிறிய பலன் என்று சொல்லும்படியாயிருக்கும்.

ராயல் விமானப்படை மிகவும் கனமான குண்டுகளைச்சுமந்து செல்லத்தக்க அவ்வளவு பெரியதொரு குண்டுபோடும் விமானப்படையைக்கட்ட ஆரம்பிக்கின்றது. எதிரியின் முக்கியமான இலக்குகளினிடையே உன்னிப்பானதும், மிகவும் நாசத்தை உண்டாக்குவதுமான பல தாக்குதல்களைச்செய்ய ஆரம்பித்திருக்கிறது. இதுவரையில் அவைகள் வெற்றிகரமாய் இருக்கின்றன.

இந்த அதிகமான விமானத் தாக்குதல்களின் பயனுக, ஜெர்மன் மக்கள் தாங்கள் தேசம் விமானப்படையெடுப்பால் கூடிய சீக்கிரம் தகர்க்கப்படும் என்பதை முதல் தடவையாக உணர்ந்திருக்கிருர்கள்.

ஜெர்மனிக்கு வெகு அருகிலுள்ள ரைன்லாந்திற்கு வெகுதூரம் வரையில் விமானத் தாக்குதல்கள் ஏற்படும் பயன்கள் உணரப்பட்டன. மேற்கு ஜெர்மனியில் தற்சமயம் எந்த நகரமும் தன்னைப் பத்திரமாக இருப்பதாகக் கருத முடியாது.

ஜெர்மனியில் தொழிற்சாலைகளையும், சக்தியையும் திரும்பவும் பலப்படுத்தமுடியாதவாறு நமது இங்கிலாந்து, அமெரிக்க குண்டு போடும் விமானப்படைகள் நாசமாக்கும்நாள் வெகு தூரத்திலில்லை. ஜெர்மானிய மக்களில் பெரும்பாலோர் யுத்தம் நன்மை பயக்கத்தக்கதல்ல, ஹிட்லர் பின்பற்றத்தக்கவனல்ல என்ற முடிவுக்குவரும் நாள் நெருங்குகிறது.

---

# ஐரோப்பாவில் அச்சுநாடுகள் தற்காப்பு முறையை அனுஷ்டிக்கின்றன.

யுத்தத்தின் தவிர்க்க முடியாத சில ஹேஷ்யங்களிலிருந்து அச்சுநாடுகளின் யுத்த தந்திரம் திடீரென மாறுதலடைந்துவிட்டது. அவர்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள ஜனங்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தை கவனித்தாலேயே ராணுவ நிலைமையில் அடிக்கடி ஏற்படும் சிக்கல்களைக் கண்டு நாஸிகள் அச்சம் கொள்ளுகிருர்களென்று தெரியவருகிறது. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக அவர்கள் தற்காப்பு முறைகளை மேல் மேலும் கையாள ஆரம்பித்துவிட்டார்களென்பது தெளிவாகப் புலப்படுகிறது. இன்று நேசநாடுகள் முன்னேற்ற யுத்த முறையைக் கையாண்டுவரும்பொழுது, ஹிட்லரின் தலைமை காரியாலயத்திற்கு பொம்மைத் தலைவர்களும், குயிஸ்லிங்குகளும் ஏராளமாகச் சென்றுர்கள். ஐரோப்பா கண்டத்தின்மேல் நேசநாடுகள் படையெடுத்தால் ஆக்கிரமிப்பு நாடுகள் எவ்விதம் நடந்துகொள்ளுமோ என்று ஹிட்லர் மிகுந்த கவலைகொண்டுதான் அவர்களை வரவழைத்தானென்று சொல்லவேண்டியதாகயிருக்கிறது.

இம்மாதிரியான துர்தசையை நாஸிகள் எவ்விதம் படிப்படியாக அடைந்தார்களென்று இங்கு கூறுவோம்.

(1) 1942-ம் வருஷம் வேனிர்காலத்தில் நாஸிகள் புதிய உலக அமைப்பு திட்டத்தின் குணதிசயங்களைப்பற்றி சிலாகித்துப் பேசினுர்கள். ஆகிலும் அவர்களுக்குக் கஷ்ட தசை ஆரம்பித்துவிட்டது.

### அயல்நாட்டுப் பிரசாரம்.

1942-ம் வருஷம் மே மாதத்தில் பெர்லின் ரேடியோவில் அவர்கள் உலகத்தாருக்கு ஒலிபரப்பியபொழுது "ஐரோப்பாவின் ஒற்றுமையானது சாதாரணமாகவும் திட்டப்படியும் ஏற்பட்டுவிட்டது. புதிய உலக அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்பதில் ஐரோப்பிய நாடுகளுக்குள்ள ஆர்வத்தை எவ்விதத்திலும் தடைபடுத்த முடியாது" என்று பிரசங்கம் செய்யப்பட்டது.

"ஜெர்மனியில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வேலை செய்துவருகிருர்களென்றுல், அவர்கள் ஜெர்மானியர்களை நன்ருய் உணர்ந்துவிட்டார்கள், என்பதையும் ஜெர்மனியைப்பற்றி எதிரிகள் செய்துவரும் பிரசாரம் பொய்யென்றும் அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களென்பதையும் இது வெளிப்படுத்துகிறது" என்று நாஸி தரைப் படைத் தலைவர் ஹர் ஸாக்கல், 1943-ம்

### ஆனுல் ஜனங்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டதாவது.

"ருஷ்யர்கள் மறுபடியும் முன்னேறிவிட்டார்களென்று அறிக்கை வெளிவரும்பொழுது செம்படையை ஜனங்கள் கூச்சலிட்டு உத்ஸாகப்படுத்துகிருர்கள். போல்ஷிவிஸத்தை எதிர்த்துப் போர் புரிவதில் ஐரோப்பாவுக்காக ஜெர்மனி யுத்தம் செய்துவருகிறதென்று ஜனங்களிடம் வற்புறுத்துவது கஷ்டமாகயிருக்கிறது."

(பர்லின் ஒலிபரப்பு, ஏப்ரல் 8, 1943.)

"போலிஷ் ஜனங்கள், ஸெக்கர்கள், ருஷ்யர்கள், யூதர்கள்கொண்ட தொழிலாளர்கள் வேலை செய்வதைக் கண்ணுற்றேன். கூடிய வரையில் அதிக வேலை செய்யக்கூடாதென்று அவர்கள் ஒப்பந்தம் பேசிக்கொண்டிருக்கிருர்களென்று தோன்றுகிறது. இவர்களில் 12 பேர்கள் சேர்ந்து ஒரு தண்டவாளத்தைத் தூக்குவதைப்பார்த்தால் இவர்கள் மிகவும்

வருஷம் மார்ச்சுமீ 18-ம் தேதியன்று சொன்னர்.

சோம்பேறித்தனமாக வேலை செய்கிருர்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

(ஹிம்லர் வெளியிடும் பத்திரிகையான டாஸ்ஷ்வார்ஸிகோர்.)

(2) ருஷ்யாவின் தீவிரமான எதிர்ப்பிலிருந்து ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. உடனே நாஸிகள் போல்ஷிவிக் பூச்சாண்டியைக் காட்டி ஜெர்மனியானது தேச ஆக்கிரமணத்துக்காக இல்லாமல் ஐரோப்பாவை ரக்ஷிப்பதற்காகத்தான் யுத்தம் செய்கிறதென்றும் வெளியிட்டது.

### நாஸிகள் ஐரோப்பாவில் நம்பிக்கை உண்டுபண்ணுகிருர்கள்.

"நம்பிக்கையில்லாதவர்கள் நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, அவர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரி, இந்தச் சங்கடமான சமயத்தில் கிருஸ்துவ மதத்தின் நோக்கங்களை ரக்ஷிப்பது ஜெர்மனிதான்."

(பெர்லின் ஒலிபரப்பு, ஏப்ரல் 21, 1943).

"பல நூற்ருண்டுகளாக அபிவிருத்தியடைந்திருக்கும் நாகரீகத்தை போல்ஷிவிக் காட்டுமிராண்டிகளிடமிருந்து ஜெர்மனிதான் காப்பாற்றிவருகிறது".

(பெர்லின் ஒலிபரப்பு, ஏப்ரல் 1943.).

### ஐரோப்பாவின் ஞாபகம்.

"கிருஸ்துவமதம் ஆத்மாவுக்கு ஏற்பட்ட ஒரு நோய். இயற்கையான மனே உணர்ச்சியை அது சிதற அடித்துவிடுகிறது. இதன் பயனுக சரீர வலிமை குறைந்து அநேக ஜெர்மானியர்கள் பரிதாபகரமான நிலைமையை அடைந்துவிட்டார்கள்." (டாஸ் ஷவார்ஸ்கோர் 1939-ம் வருஷம் ஜூன்மீ 15).

"ஐரோப்பாவை போல்ஷிவிஸத்திலிருந்து ரக்ஷிக்கத்தான் ஜெர்மனி ருஷ்யாவுடன் போர் புரிகிறது என்று சொல்லுவது தவறு. நாம் கலைக்கியானத்தையும், ஜனநாயகத்தின் நாகரீகத்தையும் ரக்ஷிக்க யுத்தம் செய்யவில்லை. ஜெர்மனியைப் பாதுகாக்கத்தான் நாம் யுத்தம் செய்கிருேம்." (டாஸ்ஷ்வார்ஸ்கோர், ஜூலை 1942).

"இதற்கு முன் நாம் டம்பமான நோக்கங்களுடன் சண்டை செய்தோம். இந்த யுத்தத்தில் நாம் நிலக்கரி, இரும்பு, பெட்ரோல், கோதுமை இவைகளின் லாபத்திற்காக சண்டைபோடுகிருேம்." (ஜோஸப் கோயபல்ஸ், அக்டோபர் 18, 1942).

(3) போல்ஷிவிக் பூச்சாண்டிப் பேச்சு உபயோகமற்ற வசைச்சொல் என்று அறிந்துகொண்டு, உங்கள் க்ஷேமத்திற்கு நேசநாடுகளை நம்பாதீர்கள்; அவர்களிடையே ஏராளமான பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று நாஸிகள் அடிமைப்பட்ட ஜனங்களுக்குப் புத்திமதி புகட்டுகிருர்கள்.

### ஆக்கிரமிப்பு ஐரோப்பாவுக்கு அறிக்கை.

"ருஷ்யாவுக்கும், போலந்துக்குமுள்ள வித்யாசங்கள நேசநாடுகளுக்கிடையே யிருக்கும் பிளவுக்கு அறிகுறி." (பெர்லின் ஒலிபரப்பு, ஏப்ரல் 1943.)

### ஜெர்மானியர்களுக்கு அறிக்கை.

"போலந்துக்கும், ருஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்ட மனஸ்தாபத்திலிருந்து நேசநாடுகளுக்கும், ருஷ்யாவுக்கும் வெறுப்பு ஏற்படுமென்று நினைப்பது அல்பபுத்தியையும் ஏமாற்றத்தையும் காண்பிக்கும்." (ரோம் ஒலிபரப்பு, மே 1, 1943).

(4) நேசநாடுகளிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது. ஆகையால் அவர்களிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது என்று சொல்லும் பாடத்திற்கு உபபலமாக ஐரோப்பிய ஜனங்களுக்கு லஞ்சம் வழங்கப்படுகிறது. அவர்கள் சரியான முறையில் நடந்துகொண்டால் அவர்களுக்கு நாஸிகள் ஸ்வதந்திரம் அளிப்பார்களாம்.

### நாஸிகளின் தற்காலத்திய பேச்சு.

"ஐரோப்பிய நாடுகளின் ஸ்வதந்திரத்தையும், சுயேச்சையையும், தேசியப் பொருளாதார அபிவிருத்தியையும் நாஸிகள் மதித்து

### அவர்களுடைய உண்மையான அபிப்பிராயம் வேறு.

ராஷ்ணிக் என்பவரிடம் ஹிட்லர் சொன்ஞர் "ஐரோப்பாவையும் அதன் குடியேற்ற நாடுகளையும் நாம் அடையவேண்டும். சிறிய

விடுவார்களாம்".

நாடுகள் இனிமேல் நிலைக்கமுடியாது. நாம் சமத்வத்தை விரும்பவில்லை. நாம் எஜமான் களாக இருக்கவேண்டும்." (ஹிட்லர் பேசுகிருர் என்னும் புஸ்தகம்.)

"எங்களுடைய திட்டத்தில் மத்திய காலத்தில் அனுஷ்டானத்திலிருந்த அடிமைத்தனத்தை நவீன முறையில் ஏற்பாடு செய்யப் போகிறோம்." (ரிச்சர்ட் வால்டர் டாரே, ஜெர்மனியின் விவசாய மந்திரி, மே, 1940.)

"யுத்தம் வெற்றிகரமாக முடிந்தபின், யுத்தக் கடன்களை நாம் வெகு சீக்கிரமாக தீர்த்துவிடலாம். ஜெர்மனியின் பொருளாதார முறைகளுக்கு ஏராளமான தொழிலாளர்களும் இயற்கைப் பொருள்களும் அகப் பட்டுவிடும்." (டாக்டர் பங்க், ஏப்ரல் 25, 1942.)

(5) கடைசியாக, ஐரோப்பிய அரணின் வலிமையைப்பற்றி ஜெர்மனி சிலாகித்துப் பேசுகிறது.

**அரணின் விவரம்.**

"அட்லாண்டிக் அரண் என்பது சைனுவின் பெரிய சுவரைக் காட்டிலும் 200 கிலோமீட்டர் நீளமுள்ளது. அதிக அகலமுமுள்ளது. எகிப்திய பிரமிட்டுகளைவிட மகத்தான அரண்கள். இதில் ஒவ்வொரு இடத்திலும் பலமான தற்காப்புகளிருக்கின்றன." (பெர்லின் ஒலி பரப்பு, ஏப்ரல் 1943.)

**அதன் உண்மை.**

"மாகினோ அரண் பிளவுபட்டதிலிருந்து தற்காப்பு அரண் எவ்வளவு வலுவானது என்று நாம் நன்றாய் அறிவோம்." (பெர்லின் ஒலி பரப்பு, ஜுன் 15, 1940.)

---

# பால்கன் நாடுகள்.

(லியோனர்ட் கிர்ஸ்சென்).

நேசதேசத் தாக்குதல் எங்கு நடக்கும் என்ற சந்தேகம் அதிகமாகிறது. அநேகமானவர்கள் இதாலியின்மேல் தாக்குதல் ஏற்படலாம் என்று நினைக்கிருர்கள். போர்ச்சுகல், துருக்கி என்ற இரண்டு நடுநிலைமை நாடுகள் இருக்கும் மத்தியதரைக்கடலின் இருபுறத்தின் வழியாகவும் ஹிட்லரின் "ஐரோப்பியக்கோட்டை" தாக்கப்பட ஹேதுவிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்னுல் ஹிட்லர் இவ்விரு நாடுகளையும் தாக்குவானே என்ற நேசக்கட்சியினர் சந்தேகப்பட்டனர். ஆனுல் இப்பொழுது ஹிட்லர் கலக்கமடைந்திருக்கிருன். இவ்விரண்டிற்கும் வித்தியாசம் உண்டு. சண்டையில் ஈடுபட இஷ்டமில்லாத துருக்கியின்மேல் ஹிட்லர் படையெடுத்து நசுக்கிவிடுவானே என்று நேசக்கட்சியினர் சந்தேகப்பட்டனர். ஆனுல் இன்றைக்கு ராணுவ உதவியோடு துருக்கி நேசக்கட்சியோடு சேர்ந்து யுத்தத்தில் பங்கு எடுத்துக்கொள்ளுமோ என்று ஹிட்லர் பயப்படுகிருன். ஜெர்மனிக்கு ஏற்பட்ட இந்தச் சந்தேகத்தினுல் அவசரமான சில ராஜீய நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அவைகள் பலவிதமானவை. அவைகளில் சமாதான கோரிக்கையும் ஒன்றுகும். இந்தப் பேச்சு முகான்மையான அச்சுவல்லரசுகளிடமிருந்து உண்டாகி பால்கன் நாடுகளின் சிற்றரசுகள் மூலமாக வெளிவந்திருக்கிறது. இவைகளும் முடிவான ஒரு கோரிக்கையாக ஏற்படவில்லை. அதிகாரவர்க்கத்தைச்சேர்ந்ததும், அதிகாரவர்க்கத்தைச் சேராததுமான சில ஒற்றர்கள் இதில் முயற்சிசெய்து வருகிருர்கள்.

இப்பொழுது அச்சு நாடுகளுக்குள்உள்ள சம்பந்தா சம்பந்தங்களை நாம் நன்குணர்ந்திருக்கிறோம். அதிலும் சிறு நாடுகளுக்கும், பெரிய நாடுகளுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். இந்த சமயத்தில் சிறிய நாடுகள் தங்கள் தங்கள் இஷ்டம் போல் ஒரு காரியம் செய்ய நினைக்கவோ, அல்லது செய்யவோ கூடும் என்று நாம் நினைப்பது

தவருகும். சிறிய பால்கன் நாடுகள் யுத்தம் முடிந்தபின்னுள்ள காலத்திலும், அச்சுத் தலைவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினின்றும் விலகி, தானுக ஒரு தனியான சமாதானம் செய்து கொள்ளக்கூடும் என்று இங்கு ஒருவரும் நம்பவில்லை. இம்மாதிரி ஒற்றர்கள் வருவதற்கும், போவதற்கும் வேறு சில கொள்கைகள் இருக்கின்றன. பல்கேரியா துருக்கியின் எல்லையிலுள்ள ஜெர்மன் போலீஸார், அங்கு பிரயாணம் செய்யும் பிரயாணிகள் தடுக்கப்படாத கடிதங்களை தங்களுடன் கொண்டுசெல்வதை, தடுப்பார்களானுல், தங்கள் விருப்பங்களுக்கு மாருக நடக்கும் ஜனங்களுக்கு அந்த வழியைப் போகவும் வரவும் ஜெர்மன் போலீஸார் உபயோகிக்க அனுமதிக்கமாட்டார்கள். ஆகையால் ஜெர்மன் அதிகாரிகள் உத்தரவின் மேல்தான வருகிருர்கள். இதில் சில விஷயங்கள் இவைகளைத் தவிர இருக்கின்றன.

முதலாவதாக ராஜீயமானதும், தந்திரமானதுமான புகைத்திரையைப்போல் தங்கள் பலமின்மையை வெளிக்குக்காட்டி நேசக்கட்சியினரை ஜெர்மானியர் எவ்விடத்தில் யுத்தத்திற்குத் தயாராக இருக்கிருர்களோ அவ்விடத்தை தாக்கச் செய்வதற்காகும். ஜனங்களை பால்கனிலிருந்து துருக்கிக்கும், துருக்கியிலிருந்து பால்கனுக்கும் அனுப்பி, துருக்கி என்ன செய்ய நினைத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறியவும் இருக்கலாம். துருக்கியின் ராஜீய தந்திர கோஷ்டிகள் விரும்பிய பால்கன் நாடுகளின் ஒற்றுமையை அபிவிருத்திசெய்ய விருப்பமிருப்பதாய் பாசாங்கு செய்தும், நேசக்கட்சியாருடன் சிறிது காலமாவது சேராவிடில் அதை நடுநிலைமை வகிக்கும் படியாய் செய்யவேண்டுமென்று அச்சுநாடுகள் எண்ணங்கொண்டிருக்கிருர்கள்.

ஆனுல் அவர்களில் சில உண்மையாளர்கள், பிற்கால பாலகன் ஒத்துழைப்பில் துருக்கி மிதமான ஒருபலமான தேசமாய் விளங்கும் என்று நம்பிக்கையோடு உள்ளவர்கள் இருக்கலாம். ஆனுல் அச்சு நாட்டினரின் கீழ் இருந்து உழைத்துவரும் வரையில் இம்மனிதர்கள் தங்கள் வேலையை நடத்தமுடியாது. அப்படி அவர்கள் இஷ்டம்போல் நடக்கவேண்டுமென்ருல் முதலில் அவர்கள் அரசாங்கத்தை உடைத்து எறியவேண்டும். யுத்தத்திற்குபின் தங்கள் சொந்த ஜனங்களின் முன்னிலையிலும், நேசக்கட்சியினரின் முன்னிலையிலும் நடத்தப்படும் விசாரணையில் பலவகைப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்கவேண்டிய அரசாங்கங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள துருக்கி விரும்பவில்லை.

இத்தகைய காரணங்களால் சமாதானம் கிடைக்குமா என அறிய விரும்பும் ஒற்றர்களுக்கு ஏதும் பயன் கிடைக்கவில்லை. இதனுல் அச்சுநாட்டினரிடையேயுள்ள சந்தேகாஸ்பதமான விஷயங்களை துருக்கி அறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

"ஜெர்மனி பலத்தோடு இருந்த காலத்தும், இதாலி தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்ட காலத்தும், இன்றையதினம் மிகவும் தாழ்மையுடன் விரும்புவதைப்போல சமாதான கோரிக்கைகளை அனுப்பவில்லை. உண்மையில்தானே, அல்லது உண்மையில்லாமலோ, அநேகமாய் உண்மையில்லாமலேயே இந்த சமாதான விருப்பமுள்ளோர் ஒன்றும் செய்யாமல் துருக்கியிடம் ஐரோப்பாவில் எதோ கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கூறுகிருர்கள். உண்மையில் ஏதோ கஷ்டம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. யுத்தத்தின் உண்மையான முடிவிற்கு வரும் கொள்கையோடு, ஐரோப்பாக் கண்டத்தின்மேல் தாக்குதல் ஏற்படும் சமயம் நெருங்க நெருங்க துருக்கி அதன் பிற்காலத்தைப்பற்றி நினைக்க ஆரம்பிக்கவேண்டும். ஆகையால்தான், சண்டையின் போக்கிலேயே, துருக்கி தன் ;பிற்கால முடிவைப்பற்றி மிகவும் கண்ணுங்கருத்துமாயிருக்கிறது என்று நான் ஆரம்பத்தில் கூறினேன்.

---

# நான்காவது இந்தியப்படை.

## யுத்தத்தில் இதுவரையில் தயாரித்த படைகளில் திடமாக யுத்தம் செய்த படையின் வரலாறு.

ஸித்திபரானி, கெரென், டொப்ருக், டாமாஸ்கஸ், ருவீஸாட் அரண், இவைகளில் வெற்றி பெற்றவர்களின் கதை, தங்களைவிட மூன்று மடங்கு அதிகமான மகத்தான சேனையை பலமாகத் தாக்கி முறியடித்த துருப்புகளின் கதை, முஸோலினியின் புதிய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை எரிட்ரியாவில் முதல்முதலாக, பலஹீனப்படுத்தியவர்களின் கதை, திட்டப்படி கைரோவின் தெருக்களில் பவனி வருவதைவிட்டு ரோமல் யுத்தம் செய்யும்படியாக

சேர்ந்ததும், தோல்வியிலும் வெற்றியிலும் திடமாகயிருந்துவந்ததுமான துருப்புகளின் கதை, மாரத் அரணைப் பிளந்ததும், ஜேனிஸியாவைத் தாக்கியதும், ஜெனரல் வான், ஆர்ணிமைக் கைதி செய்ததுமான துருப்புகளின் கதை.

இவர்களெல்லோரும் இந்தியர்கள். இவர்கள் பஞ்சாப்பிலுள்ள கிராமங்களிலும் கோதுமை வயல்களிலும் இருக்கும் விவசாயிகள். காம்பீர்யமுள்ளவர்கள். தாடி வளர்ப்பவர்கள். சிலர் ரஜபுத்ர சிப்பாய்கள். யுத்தத்தில் தொன்றுதொட்டு கியாதிபெற்ற பரம்பறையைச் சேர்ந்தவர்கள். வடமேற்கு எல்லைச் சரகத்திலிருந்து வந்த கூர்மையான திருஷ்டியுள்ள பட்டாணியர்கள். காலாட்படை, கவசம்பூண்ட குதிரைப்படை, பீரங்கிப்படை, ஸப்ளை படை, இஞ்ஜினியர்கள், வைத்திய சேவை செய்பவர்கள். எல்லோரும் இந்தியர்கள். இந்தச் சேனையில் 3 பட்டாளங்களும் பீரங்கிப் படையும்தான் பிரிடிஷ்காரர்கள்.

## கழுதைகளை உபயோகிப்பவர்கள் மலையில் சஞ்சரிக்கிறவர்கள்.

1939-ம் ஆகஸ்டு மீ த்தில் 4-வது இந்தியப்படை எகிப்தில் இறங்கியபொழுது டாங்கி எதிர்ப்பு துப்பாக்கியையாவது அல்லது சட்டி பீரங்கியையாவது உபயோகிக்க ஆபீஸர்களுக்காவது துருப்புகளுக்காவது தெரியாது. கழுதைகள் மூலம் போக்குவரத்து செய்யும் படைகளுக்கு மோட்டார்களின் உபயோகமும் பெரிய புதுராகயிருந்தது.

1942-ம் மாரிகாலத்தில் இந்தத் துருப்புகள் இரண்டு பெரிய சேனைகளை நாசம் செய்து விட்டன. மூன்றுவதாக, கியாதிபெற்ற ஜெர்மன் ஆபிரிக்கப் படைகளை முறியடிக்க ஒத்தாசையும் செய்துவிட்டன. அவர்கள் லக்ஷம் துருப்புகளைக் கைதி செய்துவிட்டார்கள். 100-க்கு மேலான விமானங்களையும் டாங்கிகளையும் அவர்கள் நாசம் செய்திருக்கிறார்கள்.

பீல்டு மார்ஷல் வேவல் சொல்லுகிறார்:—"இவர்கள் மேற்குப்பாலைவனத்தின் புழுதியிலும், அபிஸீனியாவின் எல்லைப்புறத்திலுள்ள புதர்களிலும், ஸூடானின் உஷ்ணமான சமவெளிகளிலும், எரிட்ரியாவிலும் அபிஸீனியாவிலுமுள்ள உன்னதமான மலைகளிலும், ஸிரியாவிலுள்ள மெதுவான, பசுமையான குன்றுகளிலும் சண்டை செய்திருக்கிறார்கள்."

பிரான்ஸின் வீழ்க்காட்டிற்குப்பிறகு இதாலிய குள்ளநரி பிரான்ஸின் பேரில் பாய்ந்தபொழுது பீல்ட்மார்ஷல் வேவலிடம் உள்ள சிறிய படையானது, லிபியாவில் கிரெஸியானியிடம் உள்ள 3,00,000 துருப்புகளுக்கும், இதாலிய கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள 2,50,000 துருப்புகளுக்கும் மத்தியில் அகப்பட்டுக்கொண்டது. இந்தச் சங்கடமான நிலையில் நாலாவது இந்தியப்படை சேனாதிபதிக்குத் தைரியம் ஊட்டிற்று.

## பாலைவன வெற்றி.

இரண்டு மாதங்களுக்குள்ளாகவே, பலமான சண்டைகள் செய்து, எகிப்துக்குள் வெற்றிகரமாக நுழைந்து விடவேண்டுமென்று அநேகமாதங்களாகப் பிரயத்தனம் செய்து வந்த கிராஸியானியின் துருப்புகள் சிதைக்கப்பட்டன. இடைவிடாது மூன்று நாட்கள் வரையில் பலமான புயல் காற்று அடித்து வந்த பொழுது 1 மணி 25 நிமிஷங்களுக்குள்ளாக இந்தத் துருப்புகள் மின்னல் எதிர்ப்பு யுத்தம் செய்து 4,000 பேர்களைக்கைதி செய்து, நிவீவா என்னும் முக்கியமான முகாமையும் கைப்பற்றிவிட்டது. இதன்பின் ஸிதிபரானியையும் பிடித்து அங்கிருந்த இதாலியப்படையின் சேனாதிபதியையும் அவருடைய உத்தியோகஸ்தர்களையும் கைதி செய்தார்கள்.

இவ்விதமாக கீர்த்திபெற்ற சமயத்தில் நாலாவது இந்தியப்படைக்கு ஒரு ஏமாற்றம் ஏற்பட்டது. ஜெனரல் வேவலின் துருப்புகள் ஸோலம், பார்டியா, டொப்ருக், பெங்காஸி முதலிய இடங்களைப்பிடிக்க அனுப்பப்பட்டு அவர்கள் வெற்றியின் புகழை அடைந்தார்கள். 4-வது இந்தியப்படை யுத்தத்தில் ஈடுபடவில்லை. அவர்கள் வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மேற்குப்பக்கத்தில் ஒரு பெரிய சேனையை அழித்து விட்டார்கள். கிழக்குப்பக்கத்தில் 2,000 மைல்களுக்கப்பாலுள்ள மற்றொரு சேனையை அழிக்க அவர்கள் அனுப்பப்பட்டார்கள். உலகத்திலேயே ரொம்பவும் அசௌக்கியமான பிரதேசத்திலும், பொறுக்கமுடியாத உஷ்ணத்திலும், பிளக்கமுடியாதென்று சொன்ன ஸ்தானங்களிலும், 2½ மாதங்கள் வரை அவர்கள் போர் புரிந்தார்கள். குன்றுகளிலும் கெரன் அரணின் உன்னத பிரதேசங்களிலும் அவர்கள் செய்த மகத்தான போர்கள் சரித்திரத்திலேயே புகழ் பெற்றுவிட்டன.

மத்திய காலத்திலிருந்த கோட்டையின் பாதுகாப்பு ஸ்தலம் உடைபட்டு, வெளியேறும் பாலமும் அழிவுபட்ட பிறகு உள்ள நிலையைப்போல் இந்த பயங்கரமான அமானுஷ்யமான ஸ்தலத்தில் கியாதிபெற்ற இந்தியப்படைகளும், பிரிடிஷ் படைகளும் தங்களுயிரை தியாகம் செய்து புகழை அடைந்திருக்கிறார்கள். "ராஜபுடானா குன்று," "ஸிக்கியர்களின் குன்று" "காமிரான் குன்று" என்னும் ஸ்தலங்கள் இந்தத் துருப்புகளின் அமானுஷ்யமான சகிப்புத் தன்மைக்கு அத்தாக்ஷிகள். இந்தப் பிரதேசங்களில் ஒரு சிறிய படைப்பகுதி கத்திமுனை போன்றை மலைச்சரிவுகளுள்ள உன்னதமான மலைப்பிரதேசங்களில் நின்று கொண்டு, பிடி படாத குன்றுகளிலிருந்து எதிரி வர்ஷித்து வரும் குண்டு வீச்சையும், மேலேயிருந்து கைத் துப்பாக்கிகளின் குண்டு வீச்சையும், மலைக்குன்றுகளுக்குப் பின்னாலும் முள்ளுக்கம்பிகளுக்குப் பின்னும் மறைமுகமாக நின்று எதிர்த்துவரும் எதிரியின் தாக்குதல்களையும் அவர்கள் சமா ளித்து வந்தார்கள்.

அவர்கள் இந்தியாவில் விட்டுச்சென்ற கழுதைகள் இவர்களுக்கு இந்த இடத்தில் அதிக ஒத்தாசை செய்திருக்கும் ஒவ்வொரு பட்டாளத்திலிருந்தும் ஒரு சிறிய பகுதியானது, அபாயகரமான, சிரமஸாத்யமான, பகிரங்கமாகயில்லாத, வேலைகளுக்கு, அதாவது, தண்ணீர், வெடிமருந்துகள், ஆகாரவசதிகள் இவைகளை மலைச்சரிவுகள் வழியாக உன்னத மலைகளில் சண்டைபோடும துருப்புகளுக்குக்கொண்டுபோவதற்கு, அனுப்பப்பட்டது.

### சுரங்க வெடிகளையும், குப்பைகளையும் அகற்றுவது.

குறுகலான பள்ளத்தாக்குகள் வழியாகச் செல்லும் மலைப்பிராந்திய ரஸ்தாக்களிலுள்ள சுரங்க வெடிகளையும் குப்பைகளையும் அப்புறப்படுத்துவதில் ஸாப்பர்கள் மும்முரமாக வேலை செய்யவேண்டியிருந்தது. ஒரு இரவில் ஸாப்பர்கள் அதிவேகமாக சுரங்க வேடிகளை அகற் றியதினின்றும் விடியற்காலத்தில் இதாலியர்கள் 300 கஜங்களுக்கப்பால் சுரங்க வெடிகள் பாவுவதை கவனிக்கும் படியான வசதி ஏற்பட்டது.

இம்மாதிரி விடாமுயற்சியும், ஊக்கமும் உள்ள ஒரு தீரச்செய்கைக்காகத்தான் இந்திய இஞ்ஜினியர்களைச் சேர்ந்த காப்டன் பிரமிந்திராஸிங்க் பகத் என்பவருக்கு விக்டோரியா கிராஸ் பதக்கம் வழங்கப்பட்டது.

வெடிகுண்டுகளும், செங்குத்தான பாறைகளுமுள்ள பிரதேசத்தில் அநேக வாரங்கள் தைரியத்துடன் நினறு சண்டை செய்த பிறகு, எல்லாக்குன்றுகளும் பிடிபட்டன. உன்ன தமான மலைகளுக்குச் சமீபத்தில் இந்தியத்துருப்புகளின் சவங்கள், கைகளில் சனியன்களோடு சிதறிக்கிடந்தன. கடைசிப்போரில் ஒரு சிறிய படைப்பகுதியானது ஏராளமான துருப்பு களை பலமாக சனியன்களைக்கொண்டு தாக்கியதிலிருந்துதான், பிளக்கமுடியாத இயற்கையான கோட்டையானது விழுந்து விட்டது. இதை மதித்துத்தான், இந்தப்படைகளின் தலைவரான ராஜபுடானா துப்பாக்கிப்படையைச் சேர்ந்த சுபேதார் ரிச்பால் ராமுக்கு, அவர் உயிர் துறந் ததற்காக அவருடைய மகனிடம் விக்டோரியா கிராஸ் பதக்கம் அளிக்கப்பட்டது.

### பெங்காஸி.

மறுபடியும் 4-வது இந்தியப்படை ஆபிரிக்காவுக்கு வந்தது. எதிர்ப்பு யுத்தத்தில் தீரம் காட்டியதுபோல் தோல்வியிலும் அது மனம் சோர்வடையவில்லை. விஷித்துருப்புகளிட மிருந்து டாமாஸ்கஸ்ஸை காப்பாற்றிய பொழுது ஒரு பிரெஞ்சு அதிகாரி இந்தியத்துருப்பு களின் தீரம் மெச்சத்தக்கது" என்று வெளியிட்ட புகழுரையை நிலை நாட்டியும் வந்தது. பெங்காஸியை நாஸிகள் தாக்கிய பொழுது இந்தப்படை துண்டிக்கப்பட்டுவிட்டது. இதன் 7-வது பிரிகேட் ரோமலின் பலமான வளையத்தைப் பிளந்துகொண்டு யுத்தம் செய்து, எதிரிக்கு ஏராளமான ஆள் சேதம் விளைவித்தது. துறைமுகங்களை நாசம் செய்தும் தீவைத்தும் பழுதாக்கியது. 11-வது பிரிகேட் ரோமல் டொப்ருக்கைத் தாக்கியபொழுது சமாளித்து நின்று புகழ் பெற்றது. இதன் யுத்த முறையும் சிலாகிக்கத்தகுந்தது.

கடைசி வரையில் அட்டைகள் போல தங்கள் ஸ்தானத்தை விட்டு அவர்கள் ஓடாமல் நின்றார்கள். இந்த யுத்தத்தில் நாலாவது இந்தியப்படைக்கு ஏற்பட்ட புகழின் கதையின் ஒரு பாகம் இங்கு எழுதப்பட்டது.

### ருவேஸாத் அணை.

கால சக்கரம் ஒரு சுற்று வந்துவிட்டது. எதிரியின் முன்னேற்ற வேகம் தடை பட்டது. 1942-ம் வருஷ அக்டோபர்மீத்தில் நடந்த எல் அலமீன் யுத்தத்தில் ஒரு சமயத்

தில் ருவேஸாத் அணியில் 25,000 கஜத்தை இந்திய டிவிஷன் தற்காப்பு செய்தது. இடைவிடாது ரோந்து நடவடிக்கை செய்து, சிலசமயம் தைரியமாகத் தாக்கியும், ரோமல் படைகளை சதாகாலமும் தொந்தரவு செய்து வந்தது.

சுமாராக இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஸித்திபராணியில் இதாலியச் சேனையை முறியடித்தது நான்காவது இந்தியப்படைதான். இந்தப்படையின் ஐந்தாவது பிரிகேட்தான், நவம்பர் 3-ம் தேதி இரவில் எதிரியின் பலமான தற்காப்புகளை ஊடுருவிச்சென்று ஐந்து மைல்கள் முன்னேறி, நமது படைகள் முன்னேறுவதற்கும், எல் அலமீனில் கிடைத்த வெற்றிக்கும் எதிரியை லிபியா, டுனிஸியா, ஆபிரிக்காவை விட்டுத் துரத்தியடித்ததற்கும் காரணமாக இருந்தது.

### பிரிடிஷ் படையின் புகழுரை.

இந்தியச் சிப்பாயின் திறமைக்கும், தீரத்துக்கும், இந்த யுத்தத்தில் 4-வது டிவிஷன் செய்திருக்கும் முடிவான யுத்தப்புகழ்கள் ஞாபகார்த்த சின்னமாகயிருக்கும். இவர்களைப் பற்றி பிரிடிஷ் படையினர்களும் கூறும் புகழுரையை இங்கு வெளியிடுவோம்.

"ஒரு பிரிடிஷ் பட்டாளத்தின் வாலிபமுள்ள ஆபீஸர் எழுதுகிறார். "நாம் எதிர்பார்க்கிறபடி இந்தியத் துருப்புகள் திறமை வாய்ந்தவர்களல்ல என்று எவரும் அபிப்பிராயப்பட்டால் அவரை உடன் காலத்திலேயே திருத்தியமையுங்கள். அவர்கள் மிகவும் சிறந்த யுத்த வீரர்கள். பிரிடிஷார்கள் அவர்களுடன் சல்லாபம் செய்ய முடியாத போதிலும் அவர்கள் சிறந்த முறையில் நடந்து கொள்ளுகிறார்கள். இந்தியர் சிநேகபாவமுள்ளவர்கள். சந்தோஷமுள்ளவர்கள்."

இரண்டு வருஷங்களுக்கு மேலாக, ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கான மைல்கள் முன்னும் பின்னுமாகச்சென்று, முன்னேற்ற சிரமங்களையும், பின்னேற்ற கஷ்டங்களையும் அனுபவித்து, கஷ்டமான, நிலையற்ற நிகழ்ச்சிகளின் அசௌகரியங்களை அனுபவித்தும் வந்த இந்தப்பெரிய நான்காவது இந்தியப்படையானது, அதனுடைய விடாமுயற்சியாலும் உயர்வான தீரத்தினாலும் மத்தியதரைக்கடலின் கரையோரங்களில் நடைபெற்று வரும் மகத்தான சம்பவங்களுக்கு அஸ்திவாரம் போட்டுவிட்டது. இவ்விடத்திலும் இந்தப்படைக்கு விசேஷப் புகழ் கிடைக்குமென்று நாம் நினைக்கக்கூடும். அவ்விதமாகவே இந்தப்படை டுனிஸியா யுத்தத்திலும் வான் ஆர்ணிமைப்பிடித்ததிலும் விசேஷ கியாதி பெற்று விட்டது.

---

## இதாலியர்களுக்கு பிரிடிஷ் விமானப்படையின் உபதேசம்.

இதாலிய மக்களே! இதாலியில் ஜெர்மானியர்களிருக்கும் வரையில் உங்களுக்கு அழிவு ஏற்படுவது நிச்சயம். நேசதேச விமானப்படை இதாலியின்மேல் ஏராளமாகப் பறந்து வெடி குண்டுகளை வர்ஷிக்கும். நேசதேச தரைப்படைகளும், கப்பற் படையும், விமானப் படையும் இதாலி வழியாக ஐரோப்பாவில் படையெடுப்பதற்கு உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனிக்கு இதாலி உதவி செய்யும்வரையில் உங்களுடைய தொழிற்சாலைகளுள்ள பட்டணங்களை இடைவிடாது நாங்கள் வெடிகுண்டுகளால் தாக்குவோம். இதாலியர்கள் சமாதானத்தை அடைய விரும்புகிறார்களென்று எங்களுக்கு அறிமுகமாகிறது. அவர்கள் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்று எங்களைக் கேட்கவேண்டும். இதற்காக நடவடிக்கைகளும் நடத்தவேண்டும்.

---

## பிலிபைன்ஸுக்கு டோஜோவின் புண்ணிய க்ஷேத்திர யாத்திரை.

கிழக்கு ஆசியா யுத்தத்தில் முடிவான கட்டம் வந்துவிட்டதென்று நினைத்து, பொம்மைத்தலை நகரங்களான நாங்கிங்கிக்கும், ஸுங்கிங்குக்கும் எதிர்பாராதபடி ஜெனரல் டோஜோ விஜயம் செய்தது போல மனிலாவையும் அவர் பார்வையிட்டார். இந்த விஜயத்தின் அவசியத்தைப்பற்றி மேமீ 6-ம் தேதியன்று டோக்கியோவில் ஒரு பிரசுரம் வெளியிடப்

பட்டது. "கிழக்கு ஆசியாவின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான, ஜப்பானுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் உள்ள ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் கிழக்கு ஆசியா யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு லாயக்கான ஒரு புதிய பிலிப்பைன்ஸை அமைப்பதில் 16 மிலியன் ஜனங்களேயும் ஒன்றுபடும்படி செய்வதற்கும்" டோஜோ வந்தாராம்.

இம்மாதிரி சிக்கலான பதங்களை உபயோகித்திருப்பதிலிருந்து டோஜோவின் சங்கடம் வெளியாகுகிறது. ஜப்பானியர்கள் யுத்த முயற்சிகளுக்காக உதவிவேண்டுமென்று வற்புறுத்துவதிலிருந்து ஏற்படும் சிரமங்களைப் பார்த்து தங்களுக்கு ஸ்வதந்திரம் வேண்டுமென்று பிலிப்பிநோக்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். யுத்த சிரமங்களைப்பற்றியும் பிலிப்பைன்ஸ் தீவின் மனித பலத்தையும் இயற்கை ஐச்வர்யங்களையும் எவ்விதம் அபலாபப்படுத்துகிறதென்றும் ஜப்பான் யோசனை செய்துவருகிறது.

டோஜோவின் விஜயத்தில் அடிப்படையாக பீதியும் இருக்கிறது. பிலிப்பிநோக்கள் யதேச்சாதிகார முறையில் ஒன்றுபட்டுவிட்டதிலிருந்து, ஜப்பானுடைய யுத்தத்துக்கு சாதகம் அளிக்காமல் அவர்கள் பிலிப்பைன்ஸின் ஸ்வதந்திரத்துக்காக யுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸில் எல்லா விதமான ராஜீய கக்ஷிக்காரர்களும் ஒன்று பட்டுவிட்டார்கள். புதிய பிலிப்பைன்ஸ் அமைப்பு ஏற்பாட்டில் நாட்டிலுள்ள அதிகச் சக்தி வாய்ந்த 5 லக்ஷம் வாலிபர்களும் சேர்ந்துவிட்டார்கள். பிலிப்பிநோக்கள் எல்லோரும் ஜப்பானுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று டோஜோவேண்டிக் கொள்ளுகிறான். நாஸிகள் ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் நடப்பது போல எல்லோரும் உதவவேண்டும், கட்டாய சேவை செய்யவேண்டும் என்ற முறைகளெல்லாம் கிழக்கு ஆசியாவிலும் கையாளப்படுகின்றன. ஜப்பானிலுள்ள யுத்த தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக ஷாங்கேயிலுள்ள சீனத் தொழிலாளர்களும் அனுப்பப்படுகிறார்கள். வயல்களிலும் சதுப்பு நிலங்களிலும் தொண்டு வேலை செய்வதற்காக மஞ்சூரியாவிலுள்ள யுவர்கள் கொண்டு போகப்படுகிறார்கள்.

1946-ம் வருஷம் ஜுலை மாதம் 4-ம் தேதியன்று நிபந்தனையற்ற ஸ்வதந்திரத்தையளிப்பதாக அமெரிக்கா வாக்குறுதிசெய்திருந்தது. ஏற்கனவே உண்டாகிவிட்ட ராஜீய ஒற்றுமை சம்பந்தமாக டோஜோ ஒரு சிரமமான சோதனை காலம் ஏற்படுத்தியிருக்கிறான். பொருளாதார அபிவிருத்தியிலும், நாகரீக சீர்திருத்தத்திலும் சோதனை காலம் உண்டு. பிலிப்பிநோக்களின் வாழ்க்கையைப் பூராவாகவும் மாற்றி அமைத்துவிடவேண்டுமாம். அவர்களுடைய உயர்தரமான வாழ்க்கையானது, ஜப்பானுடைய யுத்த நோக்கங்களுக்காகப் பிச்சைக்காரன் போலவும், குடியானவன் போலவும் மாறிவிட்டது. பிலிப்பிநோக்களுக்கு ஸ்வதந்திரம் வேண்டுமானால் அவர்கள் மூன்று நூற்றாண்டுகளாக அனுஷ்டித்துவந்த கிருஸ்து மத நாகரீகத்தை பரிஹரித்துவிட்டு, ஜப்பானுடைய அடிமையாகவும் ஜப்பானைப் பின்பற்றிச் செல்லுகிறவனாகவும் அவர்கள் மாறிவிடவேண்டுமாம்.

---

## ஆஸ்டெரிடீவ் என்ற இஞ்ஜின்கள்.

நேசநாடுகள் ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனை ஏற்படுத்துவதற்காகத் தயார் செய்து வரும்பொழுது யுத்த சேவைக்காக ரெயில்வே இஞ்ஜின்கள் திருத்தியமைக்கப் படுகின்றன. இந்த முயற்சியிலிருந்து "ஆஸ்டெரிடீ" என்னும் ஒரு லேசான இஞ்ஜின் தயாராகியிருக்கிறது. இதில் எவ்விதமான கரியையும் உபயோகிக்காலாம். எவ்வகைப்பட்ட இருப்புப்பாதையிலும் செல்லும்படியாக இதை அமைத்துக்கொள்ளலாம்.

யுத்தத்துக்கு முன்னால் 21 டன்கள் உள்ள இஞ்ஜின்கள் தயார் செய்ததைவிட்டு இப்பொழுது 4 டன்களுள்ள இஞ்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன. இவைகள் யுத்த தளவாடங்களையும் 700 டன்கள் எடைமானமுள்ள வண்டித்தொடர்களையும் மணிக்கு 40 முதல் 50 மைல் வீதம் இழுத்துச்செல்லும். அவசியம் ஏற்படும்பொழுது, உபரியாக ஏராளமான நிலக்கரியையும் தண்ணீரையும் கொண்டுபோவதற்கும் இதில் தனிப்பட்ட வசதி உண்டு.

ஆஸ்டெரிடீ இஞ்ஜின்கள் போன்ற சாதனங்களை ஜெர்மானியர்களும் தயார்செய்துவிட்டார்களென்று நினைக்கலாம். ஏனென்றால் பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்கள் மாதம் ஒன்றுக்கு 150 வீதம் கனமான ஜெர்மன் இஞ்ஜின்களை நாசம் செய்துவிடுகின்றன.

# மௌனமான ஒலிபரப்பு.

டுனிஸியாவில் மலைப்பிராந்தியங்களில் நடைபெற்ற சண்டைகளில் ஒலிபெருக்கவும், ஒலி பரப்பைக் கேட்கவும் சக்தி வாய்ந்த வெயர்லஸ் கருவிகள் மிகவும் பிரயோஜனமுள்ளவைக ளாகயிருந்தன என்று தெரியவருகிறது.

வெயர்லஸ் ஆபரேட்டர் உயர்த்திப் பேசவேண்டிய அவசியமில்லை. அதிலிருக்கும் இரண்டு அட்டைகளைக் கழுத்துடன் அணைத்துவைத்துக்கொண்டால், அது அவனுடைய மௌனமான பேச்சுகளை ஒலிபெருக்கிவிடும். இது ரொம்பவும் முக்கியமான ஆராய்ச்சி. இந்தக் கருவிகள் மூலமாக எதிரிக்குச் சமீபத்திலுள்ள தளங்களுக்குத் தகவல் அனுப்பப் பட்டன.

இவ்விதமான தொண்டைக்குச் சமீபத்தில் வைக்கும் கருவியை உபயோகிக்கும்பொழுது இருகைகளும் சும்மாவிருக்கின்றன. ஆகையால் ஒலிபெருக்கும்பொழுதே இரண்டு கைகளும் ஆயுதங்களை உபயோகிக்கக்கூடும்.

## விமானப்படையின் ரக்ஷகப்பகுதி அநேகர்களைக் காப்பாற்றுகிறார்கள்.

### குடைகள் மூலம் சாமான் கொண்டுபோவது.

"எந்த இடத்திற்கும், எந்த நேரத்திலும்," செல்லுவோம் என்பதுதான் ராணுவ சாஸ்திரத்தில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட வகுப்பில் சேர்ந்தவர்களின் கொள்கை. இவர்கள் தான் குடைத்துருப்புகள்.

டங்கர்க் சமுத்திரக்கரையில் வெடிகுண்டுகளால் சுடப்பட்டு ஒதுங்கின ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பட்டினி இல்லாமல் ஆகாய மார்க்கத்திலிருந்து ரொட்டித்துண்டுகள் வழங்கப் பட்டது முதல்கொண்டு பிரிடிஷ் விமானப்படையில் இவ்வித சேவை செய்யும் பகுதியானது விருத்தியடைந்துவிட்டது. சைனாவிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் குடைத்துருப்புகள் இவ்விதமாகத்தான் ஸப்ளைகள் அனுப்புகின்றன.

உதவியளிப்பதற்காக அனுப்பப்படும் விமானங்களின் முன்பக்கத்தில் உணவுப் பொருள் கள் கொண்ட பெட்டிகள் ஏராளமான குடைகளுக்கடியில் கட்டி தொங்கவிடப்படுகின்றன.

சமீபத்தில் இந்தவிதமான உதவிக்காக 6,000 இந்தியத் தையல்காரர்கள் அதிகச் சிரமப் பட்டு 3,000 உணவுக் குடைகளைத் தயார் செய்தார்கள்.

வியாபாரியின் கடைக்குக் குறிப்பிட்ட தூரத்தில் விமானம் வந்தவுடன் சாமான் தள்ளும் விமானி கதவைத் திறந்து பெட்டிகளைக் கீழே தள்ளிவிடுகிறான். பசியால் மிகுந்த ஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது குடை விரித்துக்கொள்ளுகிறது. உணவுப்பொருள் களுள்ள பெட்டி மெதுவாகத் தரைக்கு வந்துசேருகிறது.

தரையில் மோதியவுடன் பெட்டி உடைந்துபோனாலும் உணவுப்பொருள்களுக்கு சேதம் ஏற்படாது. அவைகள் கடினமானவை, நாசமடையக்கூடாதவை. மேலும் அவை கள் டப்பிகளில் அடைக்கப்பட்டிருக்கின்றன.

அவசரமான சமயங்களில் குடைகளை உபயோகிக்காமலே உணவுப் பொருள்களைப் போடவேண்டும். இப்பொழுதுதான் வெடி விமானத்திலுள்ள வெடிகுண்டுவீசும் மனிதனைப் போன்ற சாதுர்யம் உணவுப்பொருள்களைப் போடுகிறவனுக்கு வேண்டும்.

இப்பொழுது உயிரை ரக்ஷிக்கக்கூடிய இவ்விதமான வசதிகள் உன்னதிலை அடைந்து விட்டன. ஆகாயத்திலிருந்து குடைகள் மூலமாக மனிதர்களும், வெடிமருந்துகளும், பீரங்கி களும், மடக்கக்கூடிய துவிச்சக்கர வண்டிகளும், சிறிய டாங்கிகளும் இறங்குவதுடன், காயம்கட்டும் வசதிகள், சேவகர்கள், டாக்டர்கள், படுக்கைகள்கொண்ட ஒரு ஆஸ்பத்திரியும் ஆகாயத்திலிருந்து கீழே கொண்டுவரக்கூடும்.

## உச்சரிப்பது கடினம்—ஆனால் அர்த்தபுஷ்டியுள்ளது.

பர்மாவிலிருந்து வெளியிடப்படும் யுத்தப் பிரசுரங்களில் சொல்லப்படும் கடினமான அநேக பதங்களுள்ள ஊர்களின் பெயர்கள் ஒலிபெருக்கும் நிலயத்திலுள்ள அனுபவம் வாய்ந்த பிரசாரர்களையும் ஏமாற்றிவிடுகின்றன. பர்மாவிலுள்ள ஊர்களின் பெயர்கள் எவ்வளவு கஷ்டத்துடன் உச்சரிக்கக்கூடியதாயிருந்தாலும், பர்மியர்களுக்கு ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தபுஷ்டியுள்ளது.

உதாரணமாக மிட்கினா என்பது ஐரோப்பியர்களுக்கு உபயோகமல்லாத வார்த்தையாகத் தோன்றலாம். அதன் அர்த்தம் "பெரிய நதிக்கு சமீபம்" என்பது. "மிட்" என்றால் நதி. 'கி' என்றால் "பெரிய" 'நா' என்றால் "சமீபம்" என்று பொருள்படும். இது ரொம்பவும் அழகான பதப்பிரயோகம். ஏனெனில் மிட்கினா என்னும் நகரம் பர்மாவின் பெரிய நதியான ஐராவதியின் இடது கரையிலிருக்கிறது.

பர்மாவின் பாஷையில் சொல்லப்படும் வார்த்தைகளில் சிலவற்றை இங்கு வரையுவோம்.

| | |
|---|---|
| பிவின்-ப்யூ ... ... | வெண்மலர். |
| தையட்மியோ ... ... | மாமர நகரம். |
| மின்ஜியான் ... ... | குதிரைமேய்ச்சல் ஸ்தலம். |
| ஷவீகு ... ... | தங்கக்குகை. |
| கியாக்ப்யூ ... ... | வெண்கல். |
| மியோஹாங் ... ... | பழைய நகரம். |
| சிட்டாங்கு ... ... | சண்டைக்குன்று. |
| சீன காங்கு ... ... | யானை மஸ்தகம். |
| மிபான் ... ... | மண்மேடு. |
| காபியா சாங்க்வியா ... | வாழைத்தோட்டமுள்ள நதியின் முகத்வாரம் |
| பூதேடாங்க் ... ... | சுரைக்குடுக்கைமலை. |

## பர்மா உதவிப்படை.

பர்மாவிலுள்ள பொதுஜனங்களும், பர்மா உதவிப்படையைச் சேர்ந்த பழைய யுத்த வீரர்களும், இப்பொழுது சேனையில் சேர்ந்து நவீன யுத்த முறைகளின் பல்வேறு அம்சங்களிலும் விசேஷப் பயிற்சிபெற்றுவருகிறார்கள். தங்கள் தாய்நாட்டை மீட்பதற்கு முன்னேற்ற யுத்தம் நடத்துவதில் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளும் தருணத்தையும் அவர்கள் எதிர்பார்த்துவருகிறார்கள்.

பாங்கிகளில் வேலை செய்யும் குமாஸ்தாக்களும், அக்கௌண்டண்டுகளும், மாணாக்கர்களும், இன்னும் பல்வேறு தொழில் முறைகளிலுள்ள மனிதர்களும் இந்தப்படையில் தானாகவே சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் மத்திய மாகாணத்தில் உள்ள பயிற்சி முகாமில் இவர்களுக்குக் கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவர்களெல்லோரும் பர்மா நிகழ்ச்சிகளில் பீரங்கிச் சண்டை, விமான எதிர்ப்பு பீரங்கிப் பிரயோகம் இவைகளிலும், தரைப்படையிலும், கவசம்பூண்ட மோட்டார்களிலும், கடற்கரைப் பாதுகாப்பிலும் நமது துருப்புகளுடன் நின்று சண்டை செய்திருக்கிறார்கள். அநேகர்கள் பர்மாவில் தங்களுடைய சிநேகிதர்களையும் பந்துக்களையும் விட்டகலவேண்டியதாயிற்று. பர்மாவிலிருந்து வெளியேறியபொழுது நோயாலும், வருமையாலும் சிலருடைய பந்துக்கள் இறந்துவிட்டார்கள்.

### திடமானவர்கள்.

நிபுணர்கள் இவர்களுக்கு ஆயுதம் உபயோகிக்காமல் சண்டைபோடும் விதங்களைக் கற்பிக்கிறார்கள். பயிற்சி ஆரம்பத்தில் கடும்போரில் இவர்கள் விசேஷ ஆர்வம் காண்பித்தார்கள். அநேகர் தோள் எலும்பும் விலா எலும்பும் முறிபட்டு ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றார்கள்.

**பர்மா உதவிப்படையினர் சமீபத்திலுள்ள ஆபீஸர்கள் பயிற்சி பள்ளிக்கூடத்திலுள்ளவர்களுடன் நடத்திய குத்துச்சண்டை பந்தயத்தில் அநேக வெற்றிகள் பெற்றார்கள்.**

ஒவ்வொரு வாரமும் பூராவான முஸ்தீப்புகளுடன் ஈரமூரடான பிரதேசத்திலும், செங்குத்தான மலைச்சரிவுகளிலும், நாள் பூராவிலும் ஆகாரமும் தண்ணீரும் இல்லாமலும் 30 மைல்கள் பிரயாணம் செய்துவருகிருர்கள்.

பர்மா உதவிப்படையைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது இந்தியாவின் கடற்கரையிலுள்ள தற்காப்பு பீரங்கிகளை உபயோகிக்கிறவர்களாக அமர்ந்திருக்கிருர்கள். இன்னும் சிலர் இந்தியச் சேனையில் முக்கியமான சில அலுவல்களைச் செய்யும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிருர்கள்.

---

## துருப்புகளின் வருங்கால க்ஷேமத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வைஸிராயின் கமிஷன்பெற்ற உத்தியோகஸ்தர்களுடனும், சிப்பாய்களுடனும் லாரியின் நிழலில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு வயது முதிர்ந்த இந்தியப்படை ஆபீஸர் அவர்களுடைய பாஷையில் பேச ஆரம்பித்தார்.

அங்கிருந்தவர்களுக்கு முகமலர்ச்சி ஏற்பட்டது. ஏனென்ருல் ஆபீஸர் தங்களுடைய வருங்கால ஏற்பாட்டைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். யுத்தத்துக்குப்பின் இவ்வுலகத்தில் அவர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் நடத்தவேண்டிய ஜீவனோபாயத்தை அவர்களுக்கு இப்பொழுதே கற்றுக்கொடுக்க தரைப்படை ஏற்பாடு செய்துவருகிறதென்று அவர்சொன்ஞர்.

அவர் மேலும் சொன்னதாவது :—

"தரைப்படையானது அவர்களுடைய நாட்டுப்புற சர்வகலாசாலை. இந்தப் பள்ளிக் கூடத்தில் கோழி வளர்ப்பதும், ரோமம் சீர்படுத்துவதும், கனிவிருக்ஷங்கள் உண்டுபண்ணு வதும் கனிவர்க்கங்களை பத்திரப்படுத்தும் முறைகளும், சிறிய கைத்தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. யுத்தத்துக்குப்பின் இந்தியாவின் க்ஷேமத்திற்கு நான்கு முக்கியமான அம்சங்களிருக்கின்றன. அதாவது புத்திசாலித்தனம், தொழிலாளர்கள் மூலதனம், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு.

"இங்கு கொடுக்கப்படும் இலவசக் கல்வியைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஸினிமா, ரேடியோ, ஹார்மோனியம்போன்ற பொழுதுபோக்குகளை நீங்கள் அனுபவிக்கலாம். உங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் க்ஷேமநிதியானது 25 முதல் 30-லக்ஷம் வரையில் விருத்தியடைந்திருக்கிறது. அது உங்களுக்கு உதவிசெய்யும்."

இம்மாதிரியாக இந்தியாவின் வருங்கால அமைப்பில் விசேஷமான பங்கெடுத்துக் கொள்ளப்போகும் துருப்புகளுக்கு அறிவும், உத்சாகமும் ஊட்டிவரும் 61 வயதுள்ள இந்தத் தரைப்படை உத்தியோகஸ்தர் சென்ற 14-மாதங்களில் உலகத்தைச் சுற்றிவரக்கூடிய ஓரளவு தூரத்தைக்கடந்து இராக்கிலும், வட ஆபிரிக்காவிலும், பர்மாவிலும் இந்தியாவின் முக்கியமான பாகங்களிலுமுள்ள $2\frac{1}{2}$-லக்ஷம் இந்தியத் துருப்புகளுக்குப் புத்திமதி உரைத்திருக்கிருர்.

---

## 'டாடாநகர்' என்ற கவசம்பூண்ட மோட்டார்கள்.

"வெடி விமானங்களால் தாக்குதல் ஏற்படும்பொழுது தரையிலுள்ள குழிகளைவிட பத்திரமான ஸ்தலங்கள்" என்று எட்டாம்படையின் முன்னேற்ற யுத்தத்தில் உபயோகப் படுத்தப்பட்டதும் இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டதும் கவசம் பூண்டதுமான டாடாநகர் என்னும் மோட்டார்களைப்பற்றி பீரங்கிப்படை உத்தியோகஸ்தர் புகழுரை சொன்னுர்.

ஆபீஸர் மேலும் சொன்னதாவது :—

"அவர் தன்னுடைய கவனிப்பு ஸ்தானத்தை நகட்டிக்கொண்டிருக்கும்பொழுது 75 மிலிமிடர் உள்ள ஒரு பீரங்கி குண்டு அவருடைய மோட்டாருக்குப் பக்கத்தில் வெடித்த தாம். கவசத் தகடுகள் நன்ருய்ப் பிணைக்கப்பட்டிருந்தன. அவைகள் துளைக்கப்படவில்லை. அதிலிருந்த நால்வரும் பத்திரமாக வெளிவந்தார்கள்.

"வெடிகுண்டோ அல்லது பீரங்கிக்குண்டோ நேரடி டாடாநகர்பேரில் விழுந்தால் தான் அவைகள் பழுதுபடும். பீரங்கி வெடிகுண்டுகள் நெருங்கிவந்தால், நாம் டாடாநகரை 500 கஜங்களுக்கப்பால் கடத்திவிடவேண்டும். அப்படிச்செய்துவிட்டால் எதிரி பீரங்கிக் காரர்கள் மறுபடியும் சுடவேண்டியதுதான். மெஷின் பீரங்கிகளிலிருந்து போடப்படும் குண்டுகள் டாடாநகரின் கவசத்தில் காயம்கூடச்செய்வதில்லை."

எட்டாம்படையுடனிருக்கும் ஒரு இந்திய தரைப்படை அப்ஸர்வர் டாடாநகர்களை உபயோகிக்கும் துருப்புகள் அவைகளைப்பற்றி சிலாகித்துப் பேசுகிருர்கள் என்றும் பீரங்கிக் குண்டுகளிலிருந்தும், வெடிகுண்டுகளிலிருந்தும் டாடாநகர் மோட்டார்கள் அநேக மனிதர்களைக் காப்பாற்றியிருக்கின்றன என்று அவர் சொன்னர். டாடாநகர்களை உற்பத்தி செய்ததில் இந்தியத் தொழிலாளிகளுக்கு பெருமை பாராட்டவேண்டும்.

---

## கரி வாயு உற்பத்தி செய்யும் சாதனங்கள்.

யுத்த அவசியத்தினலும் இறக்குமதிக் குறைவினலும் சென்ற மூன்று வருடங்களில் இந்தியாவில் அநேக புதிய தொழிற்சாலைகள் உண்டாகியிருக்கின்றன. இவைகளுள் கரிவாயு உற்பத்திசெய்யும் சாதனங்களை அமைக்கும் தொழிலும் ஒன்று. கரி வாயு உபயோகத்தினல் பெட்ரோல் பங்கீடு ஏற்பட்டபோதிலும் போக்குவரத்து குறைவுபடாமல் நடைபெற்று வருகிறது.

யுத்தத்துக்கு முன் தென் இந்தியாவிலுள்ள தனிப்பட்ட நபர்கள் மோட்டார்களுக்கு கரிவாயு சாதனங்களை இறக்குமதி செய்து, அமைத்து உபயோகப்படுத்திவந்தார்கள். சாதனங்களை உற்பத்திசெய்வதிலும் அவர்கள் சிரத்தை காண்பித்துவந்தார்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் இவ்விதமான அநேக மோட்டார்களும் ரஸ்தாக்களில் போய்க்கொண்டு இருந்தன.

1941-ம் வருஷத்தில் போக்குவரவு ஆலோசனை சபையின் உத்தரவின்படி ரயில்வே போர்டைச் சேர்ந்த ஆபீஸரான மிஸ்டர் N. C. வாட்னி என்பவர் இந்த முறையைப் பரிசீலனை செய்தார். மிஸ்டர் வாட்னி இந்தியாவில் விசேஷமாகச் சுற்றுப்பிரயாணம் செய்து உற்பத்தியின் நிலைமையைக் கண்ணுற்ருர். அச்சமயம் பெரிய தொழிற்சாலைகளும் சிறிய தொழில்ஸ்தாபனங்களுமிருந்தன. நிலைமையைப்பற்றி மிஸ்டர் வாட்னி பொதுவாக ரிபோர்ட்டு அனுப்பினர். இதன் பயனுக போக்குவரவு இலாகாவாகயிருந்து இப்பொழுது யுத்தப் போக்குவரவு இலாகா என்று நாமம் பூண்ட இலாகா சில சட்டங்களின் நகலையும், விவரங்களையும் தயார் செய்தார்கள். மாகாண நிர்வாகங்களுக்கு அவைகள் அனுப்பப்பட்டன. மலுவானவும் சிலாக்கியமாகயில்லாததுமான யந்திரங்களை உபயோகித்து வண்டிகள் கெடுதி அடையாதபடி அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

மாகாண நிர்வாகங்களின் சம்மதத்தின்பேரில் இந்தச் சட்டக் குறிப்புகள் 1939-ம் வருஷத்திய மோட்டார் வண்டிகள் சட்டத்தின் உதவிச் சட்டமாகப் பிரசுரிக்கப்பட்டு இவைகளை மாகாண நிர்வாகங்களெல்லாம் அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டன. பிரயாணம் செய்யும் பொதுஜனங்கள், டிரைவர்கள், ரஸ்தாக்களில் நடமாடுகிறவர்கள், இவர்களின் க்ஷேமமும், யந்திரங்கள் அமைப்பதில் கூடுமானவரையில் அதம பக்ஷம் கனமுள்ள தளவாடங்களை உபயோகிப்பதும் இந்தச் சட்டங்கள்படி திட்டம் போடப்பட்டிருக்கிறது.

### உற்பத்தி செய்பவர்களுக்கு உதவி.

உற்பத்தி செய்பவர்களுக்கு உதவியளிப்பதற்காக எஃகு ஸப்ளை பங்கீடு செய்யப் படுகிறது. ஸர்க்கார் ஒப்புக்கொள்ளும் உற்பத்திசாலைகளுக்கு யுத்தப் போக்குவரவு இலாகா அனுமதிச்சீட்டு கொடுத்துவிடும். பல பாகங்களிலுள்ள சேமிப்புசாலைகளிலிருந்து தங்களுக்கு ஏற்பட்ட ஸப்ளைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட உயர்தரமான யந்திரங்கள் உண்டுபண்ணப்படுகிறதா என்று நிர்த்தாரணம் செய்ய மாகாண அரசாங்கங்கள் யந்திரம் உண்டுபண்ணும் கரி வாயுவை பரீக்ஷை செய்துவர வேண்டும். இந்தப் பரீக்ஷையின் மூலம் கரி வாயுவில் எவ்வளவு கரித்தூள் பரவியிருக்கிறதென்று கண்டுபிடித்துவிடலாம். இவ்விதமாக பரீக்ஷை செய்யும் ஒரு யந்திரம் மதராஸிலிருக்கிறது. மற்ருென்று டில்லியில் ஏற்பாடாகிவிட்டது. இதே மாதிரியாக பம்பாயிலும், கல்கத்தாவிலும் யந்திரங்கள் அமைக்க ஏற்பாடாகிவருகின்றது.

யுத்த இலாகாவின் எஃகு ஸப்ளை பெற்றுவரும் உற்பத்திசாலைகள் இந்தியாவில் இப்பொழுது 50 இருக்கின்றன.

தற்சமயம் இந்தியாவில் கரிவாயு உபயோகித்து 10,000 மோட்டார்கள் ஓடுகின்றன. ஒரு வருஷத்தில் 600 வண்டிகள் கரிவாயுவை உபயோகித்தால், 10 லக்ஷம் காலன் பெட்ரோல் மீதப்படுமாகையால், பெட்ரோலை மீதப்படுத்துவதற்கு அதிகமான மரக்கரியை உபயோகிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்தியாவில் மரக்கரியானது ஏராளமாக அகப்படுகிறது. மோட்டாரில் கரிவாயு உபயோகிப்பதற்கு இவைகள் மற்றெவ்விதமான கரிகளையும் விட சிலாக்கியமானவை.

கரிவாயு யந்திரங்களைக் குறிப்பிட்ட முறையில்தான் உண்டுபண்ணவேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையில்லை. தனிப்பட்டவர்களின் முயற்சிகளை ஆதரிப்பதே அவர்களின் நோக்கமாகும். ஆகையால் உற்பத்தி செய்கிறவர் தன்னுடைய அனுபவத்தையும் தான் செய்யக்கூடிய முயற்சிகளையும் ஒட்டி யந்திரங்களை அமைத்துவரலாம். இவ்விதம் நடைபெறுவதிலிருந்து உற்பத்திசெய்கிறவர்களுக்குள் நல்ல முறையில் போட்டி உண்டாகி, அதன் மூலம் சிலாக்கியமான யந்திரங்கள் உண்டுபண்ணப்படும்.

இவ்வருஷம் முதல் பாதிக்குள்ளாகவே குத்தகைக் கடன் திட்டப்படி அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு 3,000 மோட்டார் வண்டிகள் வந்துசேரும். இவைகளை விலைக்கு வாங்கும் பொதுஜனங்கள் ஒரு ஷரத்துக்குட்பட்டுத்தான் அவைகளை வாங்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டின் யுத்தப் போக்குவரவு இலாகாவின் உத்தரவுப்படி சம்பந்தப்பட்ட மாகாண போக்குவரவு கண்ட்ரோலர் ஆமோதித்த கரிவாயு யந்திரத்தை மோட்டார்களில் அமைத்துவிடவேண்டும். பெட்ரோலைக் கூடுமானவரையில் மீதப்படுத்துவதுதான் முக்கிய நோக்கம். இதற்காக மோட்டார்களில் கரிவாயு யந்திரங்கள் அமைக்கவேண்டுமென்பதையும் ஆதரித்துவருகிறார்கள். குத்தகைக் கடன் திட்டப்படி சாமான்கள் யுத்தத் தேவைகளுக்காகவும் பொதுஜனங்களின் சௌகரியத்துக்காகவும் அனுப்பப்படுவதால் மத்திய அரசாங்கம் இந்த சாமான்களுக்கு பொறுப்பாளியாவார்கள். இந்தப் பொறுப்பைச் சரிவர நடத்துவதற்கு, யுத்தப் போக்குவரவு இலாகா மோட்டார்களை பங்கிடுவதற்காகத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

விலைக்கு வாங்கி பல தகுதிகளில் பண்டம் கொடுப்பது விலக்கப்பட்டிருக்கிறது. பண்டம் மாற்றுவதில் கொடுக்கப்படும் பழைய மோட்டாருக்குக் குறைச்சலான விலை மதிப்புப் போட்டு விற்பனை செய்பவர் அதிக லாபம் சம்பாதிப்பதும் தடைபட்டிருக்கிறது.

குத்தகைக்கடன் திட்டப்படி கிடைக்கும் மோட்டார் டிரக்கு, அல்லது வண்டியின் ஸ்வான்தார், இந்தியாவில் எந்த பாகத்துக்கும், உத்தரவின்படி யுத்த சேவைக்கு அதை உடன்காலத்தில் அனுப்பவும் தயாராகவிருக்கவேண்டும்.

---

## யுத்தமும், காகிதச் சிக்கனமும்.

### மற்ற நாடுகளின் திட்டங்கள்.

இந்தியாவில் காகித உபயோக முறையில் சிக்கனம் செய்யவேண்டுமென்ற திட்டத்தை கவனிக்கும்பொழுது மற்ற நாடுகளில் இவ்விஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் நமக்கு ஞாபகம் வருகிறது. அவைகள் நம்மைவிட அதிகக் கடுமையானவைகள்.

கனடாவிலும், அமெரிக்காவிலும் காகித உற்பத்தியும், காகித சாமான்களும், பத்திரிகைக் காகிதங்களும் சென்ற ஆறு மாதங்களுள் சராசரி உற்பத்திக்குக் குறைக்கப்பட்டு விட்டது. யந்திரங்களும், தொழிலாளர்களும், மின்சார சக்தியும் மற்ற தொழிற்சாலைகளின் உபயோகத்துக்கு பிரயோஜனப்படுத்தப்படுகின்றன.

### பிரிடனில்.

பிரிடனில் காகித உற்பத்தி மில்களில் 20 சத விகிதம்தான் இயற்கை நாறுகளிலிருந்து காகிதத்தை உற்பத்தி பண்ணும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்பும், எஃகும் முக்கியமாக அனுப்பவேண்டியிருப்பதால் காகித உற்பத்தி யந்திரங்களை அதிகப்படுத்தவோ அல்லது திருத்தியமைக்கவோ இப்பொழுது இயலாது. காகித மில்கள் பழைய உபயோகமற்ற காகிதங்களையும் உபயோகப்படுத்தி புதிய காகிதங்கள் உற்பத்திசெய்கின்றன.

காகிதத்தை தகனம் செய்கிறவருக்கு 100 பவுன் வரையில் தண்டனை விதிக்கப் படுமென்று இங்கிலாந்தில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. சாமான்கள் கட்டுவதற்குக் காகிதத்தை உபயோகிக்கக்கூடாதென்றும் ஜனங்கள் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். வீணாய்ப்போன காகிதங்களை எல்லாம் காகித உற்பத்திசாலைகளுக்கு அனுப்பிவிடவேண்டும்.

விளம்பரங்களும், போஸ்டர்களும் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன. வியாபார சுற்றுப் பிரசுரங்களும், அட்டவணைகளும் அச்சிடக்கூடாது. பத்திரிகைகளில் விளம்பரத் துக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளும் அளவிடப்பட்டிருக்கிறது. விளம்பரத்தின் அளவும் நிர்த் தாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

உதாரணமாக "ஸ்ட்ராண்ட் பத்திரிகை" 300 பக்கங்களிலிருந்து 20 அல்லது 30 பக்கத் துக்குக் குறைந்துவிட்டது. சட்டைப்பையில் போட்டுக்கொள்ளக்கூடிய அளவுக்கும் குறைபட்டுவிட்டது.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 149. (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 5- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 6- 6-43 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| 7- 6-43 | வெங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 |
| 8- 6-43 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |
| 9- 6-43 | குழிபிறை | ... மாலை | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 10- 6-43 | களமாவூர் | ... ,, | 7.00 |
| ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| 11- 6-43 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 150. (3-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 12- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 13- 6-43 | முள்ளங்குரிச்சி | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |
| 14- 6-43 | அன்னவாசல் | ... ,, | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 |
| 15- 6-43 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 16- 6-43 | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 17- 6-43 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலிமலை | ... ,, | 7.30 |
| 18- 6-43 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| ,, | எம்பல் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 5— 6—43 | திருமயம். |
| 6— 6—43 | விராச்சிலை. |
| 7— 6—43 | கீரனூர். |
| 8— 6—43 | குடுமியாமலை. |
| 9— 6—43 | கரம்பக்குடி. |
| 10— 6—43 | கீழாநிலை. |
| 11— 6—43 | புதுக்கோட்டை. |
| 12— 6—43 | வெட்டம்விடுதி. |
| 13— 6—43 | தீத்தான்விடுதி. |
| 14— 6—43 | விராலிமலை. |
| 15— 6—43 | வடகாடு. |
| 16— 6—43 | ராயவரம். |
| 17— 6—43 | குழிபிறை. |
| 18— 6—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—8-6-43.